★ விலை ரூபா 1 25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 புரட்டாதி 18 ஜுல்-கஜ் 26 இதழ் 233

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4 10 83

## பார்த்தசாரதி மீண்டும் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க இந்தியப்பிரதமரின் விசேட பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி இம்மாத இறுதியில் இலங்கை வருகிறார்.

இலங்கை ஜனாதிபதியின் செயலகம் இத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதுசம்பந்தமாக திரு. பார்த்தசாரதிக்கு உத்தியோக பூர்வமான அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்தது.

இதேவேளை தற்போது கனடாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் இம்மாதம் 10ம் திகதி சென்னை செல்கிறார்.

கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் இம்மாதம் 22ந் திகதி இரமேஸ்வரம்-தலைமன்னார் கப்பல் சேவை நிறுத்தப்பட முன்னர் இலங்கை திரும்பவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்

# "இடைத் தேர்தலில் கூட்டணி குதிக்காது!"

## சென்னையில் 'சிவா' தகவல்

(சென்னை)

"பாராளுமன்றத்துக்கு கடந்த 90 நாட்களாக தமிழர் விடுதலைக்கூட்டணி எம்.பிக்கள் செல்லாததால் தங்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அவர்கள் இழப்பார்கள். அந்த நேரத்தில் இலங்கை அரசாங்கம் அறிவித்தது போல, பிரிவினைக்கு எதிராகச் சத்தியப் பிரமாணம் செய்து, மீண்டும் பாராளுமன்றம் நுழைய இடைத் தேர்தல்களில் தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் குதிக்கமாட்டார்கள்" என்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் சென்னையில் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே திரு சிவசிதம்பரம் மேற்படிக்கருத்தைவெளியிட்டார் அவர் மேலும் தெரிவித்ததாவது;

"அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் திரு கஸ்பர்வைன் பேகருக்கும், இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்குமிடையே நிகழ்ந்த பேச்சுக்கள அபாயகரமானவையாகும்.

இலங்கை தமிழர்பிரச்னையை சர்வதேச ரீதியில் அமெரிக்காவின் உதவியுடன் பெரிதுபடுத்தி அவர்களின் கோரிக்கைகளை நசுக்கிவிடுவதே இச்சந்திப்பின் முக்கிய நோக்கமாகும் என்று தெரிவித்தார்

ஐ. நா. சபைக்கூட்டத் தொடரில் இலங்கைத் தமிழர் பிரச்னையை பிரிட்டன் பிரதிநிதிகளுக்கு இந்திய பிரதிநிதிகள் விளக்கியதையும் திரு. சிவசிதம்பரம் வரவேற்றார் அத்துடன் பிரிட்டன் இலங்கைத் தமிழர் பிரச்னையில் தலையிட்டால் சிறந்த தீர்வுகளை ஏற்படுத்துவது இலகுவாக இருக்குமென்றும் அவர் நம்பிக்கை கூறினார் (கி)

## துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட வான் மீண்டும் அதேஇடத்தில்!

(யாழ்ப்பாணம்)

மூன்று வாலிபர்களினால் துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்ட மினிவான், நேற்றுக் காலை கடத்தப்பட்ட இடத்திலிருந்து 150 யார் தூரத்தில் அநாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட இந்த மினி வான் மானிப்பாயைச் சேர்ந்த கதிரவேலு நடராசா என்பவருக்கு சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வான் இலக்கம் 34 ஸ்ரீ 7051.

நேற்று முன்தினம் மானிப்பாயிலுள்ள ராஜன் மரக்காலையைப் பூட்டிவிட்டு வானை முன் வராந்தாவில் விட்டிருந்ததாகவும் துப்பாக்கி வைத்திருந்த ஒரு வாலிபர் வந்துகுறிப்பிட்ட மினி வானை தரும்படியும் மீண்டும் பக்குவமாகக் கொண்டுவந்து தருவதாகச் சொன்னதாகவும் அப்பொழுதுதான் வான் பழுதடைந்திருப்பதாகச் சொல்லி விட்டு வான்நின்ற இடத்தைப் பார்த்த பொழுது வானில் சாரதி இருக்கும் இடத்தில் மேலும் ஒருவாலிபர் இருந்ததாகவும், இன்னுமொரு வாலி

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமதி ரங்கா கடமையை பொறுப்பேற்றார்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் நேற்றுக்காலை மட்டக்களப்பு மாவட்ட அமைச்சு அலுவலகததில் தமது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றார்.

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சு செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. எம். அந்தோனிமுத்துஉட்பட இந்த அமைச்சைச்சேர்ந்த ஊழியர்கள் திருமதி ரங்கநாயகி பத்மநாதனை அவரது அலுவலகத்தில் வரவேற்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் பதவியிலிருந்த சம்மாந்துறை எம். பி யான

(8-ம் பக்கம் பார்க்க

## யாழ். சிறையிலிருந்து 6 கைதிகள் தப்பி ஓட்டம்!

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி முனையில் கொள்ளை கொலைச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு பேர் சிறைச்சாலையிலிருந்து சாதுரியமாகத் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இவர்களில் ஒருவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தவர்.

தப்பியோடியவிளக்கமறியல் கைதிகளின் விபரம் வருமாறு:

வைத்தி பத்மநாதன் [புன்னாலைக்கட்டுவன்], வீடுகளில் கொள்ளை அடித்தது தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில் இவர்மீது மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன இவர் யாழ். சிறைச்சாலையிலிருந்து முன்னர் ஒருதடவை தப்பிஓடி மீண்டும் சிறைச்சாலை அதிகாரியிடம் சரணடைந்தவர்.

நடராசா குகானந்தராசா (மண்டைதீவு) கொலைச் சம்பவம் சம்பந்தமாக யாழ். நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது. கணபதிப்பிள்ளை மகேந்திரன் (ஊரிக்காடு வல்வெட்

[8ம் பக்கம் பார்க்க]

## யாழ். ப.நோ.கூ. சங்க ஊழியருக்கு 140 அலவன்ஸ்!

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்துக்கும், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்களுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையில் ஊழியருக்கு அடுத்தமாதம் 10ம் திகதி முதல் 140 ரூபாய் அலவான்ஸ் வழங்குவதென்ற முடிவு எடுக்கப்பட்டது. 140 ரூபாய் சம்பள உயர்வு வழங்குவதற்கு சங்க நிர்வாகம் தொழிற்சங்கத்திடம் இணக்கம்தெரிவித்து இதற்கான ஒப்பந்தமொன்றில் இருபகுதியின

(8-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க - இலங்கை சந்திப்புக்கு ஆட்சேபம்

### ஊர்வலம் நடத்தப்போவதாக அ. தி. மு. க. அறிவிப்பு

சென்னை, அக். 3

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் திரு. கஸ்பர் வெயின்பேகர் உரையாடியதை தமிழக அ. தி. மு. க. கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

இந்த ஆட்சேபனையை சென்னையிலுள்ள அமெரிக்க நிலையத்துக்கு இம்மாதம் 10-ம் திகதி ஊர்வலமாகச் சென்று தெரிவிக்கவும் அக்கட்சி முடிவு செய்துள்ளது.

இத்தகவலை அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பா. உ. சண்முகம் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது: 'இலங்கைத் தமிழர் பிரச்னையை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரிடம் திரித்துக் கூறி அமெரிக்காவிலிருந்து தமிழ் மக்களுக்கெதிராக ஆயுதங்களையும், இராணுவ உதவிகளையும் பெறுவதே, இலங்கை ஜனாதிபதி, அமெரிக்கப் பாதுகாப்பமைச்சரைச் சந்தித்ததன் நோக்கமாகும். இச்சந்திப்பு அபாயகரமானது, இதனால் இலங்கை தமிழர்களுக்கு மேலும் நெருக்கடி நிலை தோன்றலாம். எனவே இச்சந்திப்பினால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் குறித்து எச்சரிக்கும் முன்னோடி நடவடிக்கையாகவே சென்னை அமெரிக்க நிலையத்துக்கு அ. தி. மு. க, வெயின்பேகர்-ஜயவர்த்தன சந்திப்பு குறித்து ஆட்சேபனை தெரிவிக்கவுள்ளது' என்றார். (கி)

## சிறையிலிருந்து தப்பியவர் இளைஞர்களால் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

சின்னவன் இராமச்சந்திரன் அல்லது ஒற்றைக் கண்ணன் (வயது 38) என்றழைக்கப்படும் நபரொருவர் இனந்தெரியாத இரு இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் சுன்னாகம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த குரக்கன்காடு என்ற இடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

கொலையுண்ட சின்னவன் இராமச்சந்திரன் தமது குடும்பத்தவருடன் வீட்டில் உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது அவரிடம் சைக்கிளில் இருஇளைஞர்கள் வந்து தமக்கு இன்னுமொரு சைக்கிள் தேவைப்படுவதாகக் கூறினராம்.

இதனையடுத்து அவர்களுக்கு சைக்கிளைப் பெற்றுக்கொடுக்க சின்னவன் ராமச்சந்திரன் சென்ற போதே அந்த இருவரும் அவரைநோக்கி சுட்டுவிட்டு தாம்வந்த சைக்கிளில் தப்பிச்சென்றனராம்.

இக்கொலை பற்றிய புலன் விசாரணைகளில் உதவிப் பொலிஸ் அதிபர் ஜனாப் மஜீத்தின் பணிப்புரையின் கீழ் சுன்னாகம் பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர். இக்கொலைக்கான காரணம் என்ன என்பது பற்றி இதுவரை எதுவும் அறியப்படவில்லை.

கொலையுண்ட சின்னவன்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் (30 முப்பது பரப்புக்காணி முழுதாகவோ, பகுதியாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: திருமதி ப. கனகசபை பணிக்கவளவு ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 8940

## தேவை

பிடவை வியாபாரத்தில் ஐந்து வருடங்கட்கு மேற்பட்ட அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை. சான்றிதழுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். கே. நாகமுத்து அன்சன், பெரிய கடை, யாழ்ப்பாணம். 9069

உருக்கு / வார்ப்பு இரும்பு மெக்கானிக்கல் வேலைத்தளத்தை பொறுப்பேற்கக் கூடிய பொறியியலாளர் அல்லது போர்மன் ஒருவர் தேவை. சம்பளம் அல்லது கமிஷன் பின்னர் தீர்மானிக்கப்படும். விபரங்களுக்கு: எல்மோஷன் ஹரன் ஸ்ரீல் கம்பனி லிமிட், பெரிய விளான், பண்டத்தரிப்பு. 9005

## தவறிவிட்டது

கட்டப்பிராய்-கல்வியங்காடு ஊடாக திருநெல்வேலி கொக்குவில் செல்லும் வழியில் காரில் வைக்கப்பட்டிருந்த ரி. வி. வெற்று காட்போட்பெட்டி 'Booster Socket' உடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும் — சன்மானம் வழங்கப்படும். எஸ். கணபதிப்பிள்ளை, இளைப்பாறிய ஆசிரியர், கட்டப்பிராய், யாழ்ப்பாணம். 9079

## சேவை

22 வருட அனுபவமுள்ள கணக்காளரினால் உங்கள் வருமானவரிக்கணக்குகளும் மற்ற எல்லாவித கணக்குகளும் (In English and Tamil) எழுதிக் கொடுக்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல; 9082, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

9082

## நெடுந்தீவு வைத்தியசாலைக்கு பொருட்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு மேசைகள், கதிரைகள், சக்கரவண்டி, படுக்கை விரிப்புக்கள் போன்ற பொருட்களை யாழ் மாவட்ட மங்கையர் கழகம் அன்பளிப்புச்செய்துள்ளது.

யாழ். மாவட்ட மங்கையர் கழகத்தலைவி திருமதி யோகேந்திரா துரைசுவாமி இந்த அன்பளிப்புப் பொருட்களை நெடுந்தீவு வைத்திய அதிகாரியிடம் கையளித்தார்.

கலவரங்களினால் இடம் பெயர்ந்துவந்துள்ள அகதிகளுக்கும் இக்கழகம் அரிசி, சீனி, மா தேயிலை, லக்ஸ்பிறே போன்ற உணவுப் பொருட்களையும் வழங்கியது.

இதுதொடர்பான வைபவத்திற்குத் திரு. த. அம்பலம் தலைமை வகித்தார். திரு. யோகேந்திரா துரைசுவாமி, திரு. பரராசசிங்கம், திரு. நா. சங்கரப்பிள்ளை, திரு. தோமஸ் உட்படப்பலர் உரைநிகழ்த்தினர்.

## நெடுந்தீவுக்கு புதிய உதவி அரச அதிபர்

(நெடுந்தீவு)

வேலணை உதவி அரசாங்க அதிபராக இம்மாதம் தொடக்கம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இடமாற்றம்பெற்றுள்ளார். யாழ். அரசாங்க செயலக உதவியாளர் திரு. கே. சர்மா நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## ஆலயபரிபாலன சபை

(அரியாலை)

அரியாலை மேற்குவெட்டுக்குளம் ஸ்ரீபுவனேஸ்வரி அம்மாள் ஆலயத்தின் வருடாந்தக் கூட்டம் திரு.வ. சின்னப்பு தலைமையில் நடைபெற்றது.

பரிபாலனசபையின் புதிய நிர்வாகிகள்தெரிவில் தலைவராக திரு. க. சோமசுந்தரமும், செயலாளராக திரு. எஸ். குணரத்தினமும், வருடமணியகாரனாக திரு. ச. நல்லையாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சுன்னாகம் கந்தரோடையில் வசித்த நாகலிங்கம் செட்டியார் றகுபதீஸ்வரன் என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/103

நாகலிங்கம் செட்டியார், குருசாமிச்செட்டியார், நாகலிங்கம் செட்டியார் சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

மனுதார்

எதிராக

1. ரகுபதிஸ்வரன் றமேஸ்
2. விஜிதா ரகுபதீஸ்வரன்
3. திருமதி தனேஸ்வரி ரகுபதீஸ்வரன் எல்லோரும் 75/6, சினிஸ்ஸ்றீற் மாத்தளை.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளசென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எதிர்மனுதார்கள் அல்லது அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முன்னே தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1981-ம் ஆண்டு ஆடி மாதம் 02-ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

காரணம் காட்டும் தி+தி 9-11-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்

காரணம் காட்டும் திகதி 9-11-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

3-10-83 (9017)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சங்கானை கிழக்கு சண்முகலிங்கம் பாலச்சந்திரன் பெண் மாலினி, பாலச்சந்திரன் மரணச் சொத்தின் விடயமாக.

இறந்தவர்

இல. T. 170

சண்முகலிங்கம் பாலச்சந்திரன், பிளாக் றோட்டு, சங்கானை.

மனுதார்

1. பாலச்சந்திரன் மதன் மோகன்.
2. பாலச்சந்திரன் செல்வஜித்
3. பாலச்சந்திரன் மகள் தனுஜா.
4. ஜெயராஜன் பிளாக், சங்கானை.

எதிர் மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணம் எய்தியவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளைஏன்முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
(8947) பதிவாளர்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, றோட், இல.85, காலஞ்சென்ற வேலாயுயுதர் சின்னையா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன ]
நியாதிக்கம் ]
இல. ரி-3726

வேலாயுதர் சின்னையா கைம்பெண் கனகம்மா, இல. 85, கொழும்புத்துறை றோட், யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் ஆதனத்தை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள எவரும் 1983-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்

டபிள்யூ. எஸ்.
செந்தில்நாதன்
மனுதாரின் சட்டத்தரணி
9066


கட்டிட தொழில் நுட்பவியல் நிறுவனம்
136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
6 மாதப் பயிற்சிகள்—ஆரம்பம் 07–10–83
காலை 8-30

1. DIPLOMA IN DRAUGHTSMANSHIP
2. DIPLOMA IN QUANTITY SURVEYING
3. DIPLOMA IN SURVEYING AND LEVELLING

(9072)

தேவை

சட்டத்தரணிகள் (ATTORNEY AT LAW) யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கும் சட்ட ஆலோசனைக் குழுவிற்கு மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ள சட்டத்தரணிகளின் சேவை தேவைப்படுகிறது.

நொத்தாரிஸ் உத்தரவுள்ளவர்கள் விரும்பப்படுவர். இடம்பெயர்ந்து வந்துள்ள சட்டத்தரணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவுசெய்யப்படுபவர்களுக்குத் தகுந்த வருமானம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு: 15-10-83.
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
விளம்பர இல 9075
மே/பா. 'ஈழநாடு' லிமிட்டெட்,
தபால் பெட்டி இல. 49, யாழ்ப்பாணம். 9075

நவீன டிசைன்களிலான
ஜில் ★ மயூரா ★ ராக ★ கிரேக் நோபிள்
றெடிமேட் ஆடைகள்

ஆண்களுக்கான
● ரௌஸர் ● ரீ சேட்
● சேட் ● பெல்ஸ்

பெண்களுக்கான
● ஜீன்ஸ் ● பெல்ஸ்
● ஸ்கேட் ● பிளவுஷ்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!
விலை: ரூ. 85/- — ரூ. 275/- வரை

சீமாட்டி
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24413
9039

"Diploma in Computer Programming in Collaboration with Dataserve"

BASIC - COBOL

BASIC — 3 மாதங்கள் (பயிற்சி நெறி உட்பட)
COBOL — 2 மாதங்கள் (பாட நெறி மட்டும்)
பயிற்சி: — B. B. C. GENIE } கலர் கொம்பியூற்றர்களில் அளிக்சப்படும்.
கட்டணம்: BASIC — 1750-00 COBOL — 750-00
(தவணை முறை வசதி அளிக்கப்படும்)
வகுப்புக்கள் ஆரம்பம்: 15–10–83
உளச்சார்பு பரீட்சை: 5-10-83ம், 8-10-83ம் நடைபெறும்
சலுகைகள்: புலமைப்பரிசில்கள், இலவச ஆங்கில வகுப்புக்கள்.
தொடர்பு:

COMTECK COMPUTER INSTITUTE
No. 82, 3rd Cross St. Jaffna.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

## பாகிஸ்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்:

# வாக்குச்சாவடிகளில் ஆயுதத் தாக்குதல்;

# துப்பாக்கிச் சண்டை, குண்டு வெடிப்பு!

லண்டன், அக். 3

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது பல வாக்குச் சாவடிகளில் ஆயுதத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மத்திய சிந்து மாகாணத்தில் 'மோறே' என்ற கிராமத்தில் சுமார் 2 மணி நேரம் அரச பாதுகாப்புப் படைகளுக்கும், தீவிர வாதிகளுக்குமிடையில் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

இத்தாக்குதலின்போது ஒருவர் கொல்லப்பட்டதாக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இச்சம்பவத்தின்போது 12 பேர் மாண்டனர் என்றும், பலர் காயமடைந்தனர் என்றும் எதிர்க் கட்சியினர் தெரிவித்தனர். பல இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. [க]

## அமெரிக்க ஜனாதிபதியின்

# பிலிப்பைன்ஸ் விஜயம் கைவிடப்படுமா?

லண்டன், அக். 3

அமெரிக்க ஜனாதிபதி றீகனின் பிலிப்பைன்ஸ் விஜயம் தொடர்பாக அவரது ஆலோசகரின் முடிவுக்கு விடுவதாக, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாதுகாப்பு காரணமாக அமெரிக்க ஜனாதிபதியின் பிலிப்பைன்ஸ் விஜயம் கைவிடப்படுமா என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை.

அடுத்தமாதம் அமெரிக்க ஜனாதிபதியின் பிலிப்பைன்ஸ் விஜயம் ரத்துச் செய்யப்பட்டால் அது அமெரிக்க - பிலிப்பைன்ஸ், நட்புறவுக்கு பெரும் இழப்பாக இருக்கும் என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஒப்புக் கொண்டார்.

இதேசமயம், அமெரிக்க ஜனாதிபதியின் விஜயம் திட்டமிட்டபடி நடக்குமென் மணிலாவிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. பாதுகாப்புக் காரணங்களுக்காக, அவர்வட பகுதி நகரில் தங்கியிருப்பார் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## தேர்தலை நடத்தக்கோரி

# பங்களாதேஷில் மாணவர் ஆர்ப்பாட்டம்

லண்டன், அக். 3

பங்களாதேஷில் இராணுவ ஆட்சியை எதிர்த்து நேற்று ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அடுத்த வருடம் மார்ச் மாதம் தேர்தலை நடத்துமாறு அரசிடம் அவர்கள் கோரிக்கை விடுத்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினுர்கள்.

18 மாத இராணுவ ஆட்சியில் நடந்த மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் இது என்று வெளிநாட்டு அவதானிகள் கருத்து தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது எவ்வித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை. (க)

# சேது சமுத்திரத் திட்டம் அமுல் செய்யப்படும்

சென்னை, அக். 3

''பக்கத்து நாடுகளில் நிலைமை மாறி விட்டதால் சேது சமுத்திரத் திட்டம் அமுல்செய்யப்படும்'' என்று கப்பல்துறை அமைச்சர் திரு. விஜயபாஸ்கர ரெட்டி தூத்துக்குடியில் நடந்த கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாக்கு நீரிணை ஆழமாக்கப்படுமென்றும், பாரதத்தின் கப்பல்கள் தற்போது இலங்கையைச் சுற்றியே சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். [க]

# ''காலனித்துவ நாடுகள் சுதந்திரம்பெறவழிவகுத்தவர் காந்திஜி''

சென்னை, அக். 3

''காலனித்துவ ஆட்சியிலிருந்து பல நாடுகள் சுதந்திரம் பெற வழிவகுத்தவர் காந்தியடிகள்'' என்று சென்னையில் நடைபெற்றகாந்தி நினைவுதின விழாவில் பேசிய தமிழ்நாடு ஆளுநர் குருணு தெரிவித்தார்.

இவ்விழாவில் பேசிய அமைச்சர் ஆர் எம். வீரப்பன், தமிழ் நாட்டுடன் காந்தி கொண்டிருந்த தொடர்புகளை வைத்து ஒரு திரைப்படம் தயாரிக்க வேண்டுமென்ருர்.

காந்திஜி, பாரதநாட்டுக்கு மட்டுமன்றி, உலகில் மனித உரிமைகளுக்குப் போராடுபவர்களுக்கும் சொந்தமானவர் என்று திரு. ம. பொ. சிவஞானம் பேசுகையில் கூறினுர்.

காந்திஜி வரலாறு தொடர்பான கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது. (க)

## பழங்குடிமக்கள் ஆராய்ச்சி நிலையம்

சென்னை, அக். 3

தமிழ் பல்கலைக்கழகத்தில், பழங்குடி மக்கள் ஆராய்ச்சி நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் பழங்குடி மக்களுக்காக 2 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களும் திறக்கப்பட்டன. ஏற்கனவே இவர்களுக்காக 12 ப. நோ. கூட்டுறவு வாகனங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன. (க)

## அவசரகாலநிலை நீடிப்பு

கெய்ரோ, அக். 3

நாட்டையும் மக்களையும் பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அவசரகாலச்சட்டம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக எகிப்திய பாராளுமன்றத்தில் ராஜாங்க உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

எகிப்திய பாராளுமன்றத்தில் நேற்று மூன்ருவது வருடமாக விசேட அவசரகாலசட்டத்தை நீடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நல்லை ஆதீனத்தில் நவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் 7ம் திகதி வெள்ளிக்கிழமை நவராத்திரி விழா ஆரம்பமாகவுள்ளது!

காலை 10 மணிக்கு அபிஷேகமும் பூஜையும் நடைபெறும். பிற்பகல் 5 சாயரட்சைப் பூஜை; ஸ்ரீசக்கர பூஜையும், மாலை 6-30 மணிக்கு விசேஷ காட்சிகளுடன் கொலுபூஜையும் நடைபெறும்.

பூஜைநாட்களில் தினமும் மாலை அபிராமி அந்தாதி பாராயணம் நடைபெறும்.

16ம் திகதி காலை 5-30 மணிக்கு மானம்பூவிழாவும், காலை 10 மணியிலிருந்து வித்தியாரம்பமும் இடம்பெறும். (அ)

## தொலைபேசி

## பாவனையாளர் பாதிப்பு

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் உபதபால் நிலைய தொலைபேசி இணைப்பு கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக துண்டிக்கப்பட்டிருப்பதால் பொதுமக்கள் தமது அவசர அலுவல்களுக்கு தொலைபேசி தொடர்பைப் பெறமுடியாது பெரிதும் கஷ்டமுறுகிருர்கள்.

மாவிட்டபுரம் உபதபால் நிலைய தொலைபேசிஇணைப்பில் தொலைபேசி வயர்களை இனந்தெரியாதவர்கள் அறுத்துச் சென்றுவிட்டதையடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது தொலைபேசி இல்லாமையால் இத்தபால் நிலையத்திலிருந்து தந்திகள் அனுப்பவும் முடியாதநிலை ஏற்பட்டுள்ளது

இந்த உபதபால் நிலையத்திலிருந்து நான்கு தொலைபேசி நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. உபதபால்நிலைய தொலைபேசி துண்டிக்கப்பட்டதால் இந்த நீடிப்பு தொலைபேசிகளும் செயலற்றுவிட்டன. (க)

## பளை ம. வி. க்கு எம்.பி. பாராட்டு

(கிளிநொச்சி)

''பளை மகாவித்தியாலயத்திலிருந்து கடந்த ஆண்டு இரு மாணவிகள் பல்கலைக்கழகம் சென்றனர். இந்த வருடமும் இவ்வித்தியாலயத்திலிருந்து இரு மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்வதன்மூலம் வித்தியாலயத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ளனர்.''

இவ்வாறு கிளிநொச்சி எம். பி திரு. வீ. ஆனந்தசங்கரி பாராட்டுத்தெரிவித்துள்ளார்.

திரு. ஆனந்தசங்கரி தனது பாராட்டுச் செய்தியில் ''இவ்வித்தியாலயம் தொடர்ந்தும் பல மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பவேண்டும். வித்தியாலய அதிபர் திரு. அ. பொ. செல்லையாவின் கடமை உணர்ச்சிகளையும் ஆசிரியர் குழாத்தையும், வித்தியாலயவளர்ச்சிக்கு முன்னின்றும் உழைக்கும் பெற்ருேர்களையும், பழையமாணவர்களையும் பாராட்டுகிறேன்'' என்று தெரிவித்துள்ளார்

## ''அணு ஆயுத அபிவிருத்தியில்

# பாகிஸ்தான் 10 ஆண்டுகள் முன்னிற்பது பாரதத்திற்கு கவலையளிக்கிறது''

## தொலைக்காட்சிப் பேட்டியில் இந்திரா

வாஷிங்டன், அக். 3

''பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் நவீன ஆயுத உதவி காரணமாக இந்தியாவின் அணு ஆயுத அபிவிருத்தியில் எந்தவி மாற்றமும் ஏற்படாது'' என்று அமெரிக்க தொலைக் காட்சிப் பேட்டி ஒன்றில் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார். பாரதப் பிரதமர் மேலும் கூறியதாவது:-

''அணு ஆயுத யுத்தம் ஒன்று நடைபெறுவதைக் கொள்கையளவிலும், நடைமுறையிலும் இந்தியா எதிர்க்கிறது. அணுஆயுத உற்பத்தியில் போட்டிபோடும் நோக்கம் பாரதத்திற்குக் கிடையாது.

''நவீன ஆயுத அபிவிருத்தியில் இந்தியாவைவிட பாகிஸ்தான் 10 ஆண்டுகள் முன்னிற்பது பாரதத்திற்குக் கவலையளிக்கிறது. அமெரிக்கா இந்த விஷயத்தில் இந்தியாவுடன் ஒருவிதமாகவும் பாகிஸ்தானுடன் வேறுவிதமாகவும் நடந்து கொள்கிறது.'' [க]

# 'கருத்துப் பரிமாறல்களுக்கு சர்வதேச அரங்கு அவசியம்''

## நியூயோர்க்கில் பாரதப் பிரதமர்

நியூயோர்க், அக். 3

''கருத்துப் பரிமாறல்களுக்குச் சர்வதேச அரங்கு அவசியம். இன்னொரு அரங்கை உருவாக்குவதைவிட ஐக்கிய நாடுகள் சபையை வலுப்படுத்த வேண்டும்.''

அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் நியூயோர்க்கிலிருந்து லண்டன் புறப்பட்ட பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேறு நாடுகளின் போட்டியைச் சமாளிக்கக்கூடிய அளவு பாரதம் பலம்பெற்று விட்டதாகவும் அவர் கூறினுர்.

பாரதப் பிரதமர் திருமதி காந்தி ஐ.நா. சபையில் உரை நிகழ்த்தியதுடன் 27 உலகநாடுகளின் அரசுத் தலைவர்களைத் தனித் தனியே சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இந்த உயர் தலைவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாரதத்திற்கும் அமெரிக்காவுக்குமிடையில் நல்லுறவு நிலவிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் ஒருவார காலம் தங்கிய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அங்கிருந்து நேற்று லண்டன் புறப்பட்டார். [க]

## பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி

இஸ்லாமாபாத், அக். 3

''பாகிஸ்தானுக்கு அமெரிக்க இராணுவ பொருளாதார உதவிக்கான முழுத் தொகையையும் வழங்குவதற்கு பாராளுமன்றத்தை வற்புறுத்துவதற்கு அமெரிக்கா சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும்'' என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. பெக்கர், நேற்று இஸ்லாமாபாத்தில் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் 3 நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் புறப்பட்டார். (க)

## 3-ம் கட்ட உணவுப் பொருட்கள் வழங்கவில்லை

(அரியாலை)

வகுப்புக் கலவரத்திஞல் பாதிக்கப்பட்ட நிலையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தோருக்கான மூன்ரும் கட்ட நிவாரண உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் வரை சங்கங்களால் வழங்கப்படவில்லை.

ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நான்காம்கட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்படும். இவ்வாரத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3ம் கட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்படாமல் இருப்பது குறித்து பாதிக்கப்பட்டோர் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

## மணிவாக்கு

மனிதன் தனது சிந்தனைகளையோ அல்லது செயல்களையோ வெளிப்படுத்த வேண்டிய தேவையற்ற நிலை அவன் வாழ்வில் வரும். எண்ணங்கள் தாமாகவே செயற்படும்; அத்தகைய வலிமை அவற்றிற்கு உண்டு.

—மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## பட்டகாலிலேபடும்

யாழ்ப்பாணத்தையே தஞ்சமென்று பல்லாயிரக் கணக்கில் அகதிகள் இன்னும் வந்து கொண்டிருக்கின்றனர்.

எல்லாம் இழந்த நிலையில் வந்திருக்கிறவர்கள் இப்பகுதியில் சில காலமாவது அமைதியாக உயிரைப் பேணுவோமென்ற ஆசையுடையவர்கள்; நியாயமான ஆசை; இன்று இதற்கு உதவாத சமூகம் மனித சமுதாயத்தில் வைத்து மதிக்கப்படமாட்டாது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் தினசரி வெளியாகும் செய்திகளைப்படித்தவர்கள் தெய்வம்தான் இலங்கை வாழ் தமிழர்களுக்கு இவ்வித தண்டனை விதித்திருக்கிறதோவென்று கலங்க வேண்டியிருக்கின்றது.

முதன்முதல் அகதிகளுக்கு வழங்கும் பொருள்களில் மோசடியிருப்பதை நாம் வெட்கத்தில் தலைகுனிந்து படிக்கவேண்டும்.

தென்னிலங்கையிலிருந்து அகதிகளாக (உண்மையான அகதிகள்) என்ன நிலையில் வந்திருக்கிறார்கள் என்பது எங்கள் சகோதரர்களுக்கு டீ. வி. யில் காட்டவேண்டுமா?

அவர்களுக்கென வழங்கப்படும் உணவுப் பொருள்கள் உடுபுடைவைகள், பாதிக்கப்படாதவர்கள் கையில் போய்ச்சேர்வதாகப் புகார்; யாழ். அரச அதிபர் இதனை முறியடிக்க நடவடிக்கை எடுப்பது பெரிதும் வேண்டப்படுகிறது.

இது உண்மையானால் எம்மில் எவர் அகதிகளுக்கு உதவத் தகைமையுடையவர்?

இன்று பொதுநலத் தொண்டில் ஈடுபடும் நிறுவனங்கள் ஆற்றும் அரிய பணியே நம்பிக்கை இழந்து மதிப்பில்லாததாக மாறிவிடும். குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள் இன்றுவது இனங்காணப்பட்டு ஒதுக்கப்படவேண்டியவை.

''அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-1983'' யாழ்ப்பாண செயலகத்தில் பணிபுரியும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் நேரடிப் பார்வையில் செயற்படுமென்ற செய்தி மக்கள் மனத்தில் பெருநம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டவல்லது.

இப்பாரிய வேலை மிகப் பொறுப்பு வாய்ந்த நேர்மைக்கிலக்கணமான அதிகாரிகளின் முழுநேர வேலையாகக் கொண்டால் உதவி உரியவர்களுக்கு உரிய நேரத்தில் உரிய முறையில் போய்ச்சேரும்.

அடுத்த விடயம்: யாழ்ப்பாணத்தில் மீண்டும் தலைதூக்கிவரும் கொலை கொள்ளை வழிப்பறி, திருட்டுச் சம்பவங்கள்; இவற்றுடன் போட்டி போடுபவை வீதிவிபத்துக்கள். சமூக உணர்வற்ற மானிட யமன்கள் எங்கள் மத்தியில் உலாவுவது பற்றி மக்கள் விழிப்பாக விருக்க வேண்டு.

தப்பும்வழி எது என்று தெரியாதநிலையில்-ஒருபுறம் ஆழமான கடல், மறுபுறம் அரக்கர் குலம்- இரு தலைக் கொள்ளியில் உள்ளிட்ட எறும்பின் கதியே சாதாரண யாழ்ப்பாண வாசியின் இன்றையகதி.

இவ்விதம் அதிகரிக்கும் குற்றச் செயல்கள் மக்களின் மனோநிலையைப் பாதித்திருப்பதும், வாழ்க்கை சீர்குலைந்து போவதும் யாழ். பொலிஸாரின் கவனத்துக்கும் கவலைக்கும் உள்ளாகியிருக்கிறது.

எந்தக் குழப்ப நிலையிலும் யாழ். பொலிஸார் பொதுமக்களின் நலனைக் கவனிக்கும் பணியில் நாம் அவநம்பிக்கை கொண்டதில்லை; எனவே இந்தச் சமூகவிரோதச் செயல்களைத் தடுக்கவும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்கவும் பொலிஸார் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் உதவ முன்வரவேண்டிய அவசியத்தை நாம் வற்புறுத்துகிறோம்.

### கொழும்பு திருமண்டலப் பேராயர் யாழ். வருகிறார்

(அரியாலை)

கொழும்பு திருமண்டலப் பேராரியர் அதிவணக்கத்துக்குரிய சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகை உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

தென்னிலங்கையில் வன்செயலால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வடபகுதிக்கு வந்திருக்கும் கிறிஸ்தவ குடும்பங்களை ஆண்டகை சந்தித்துப் பேசுவார். 9ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7-30 மணிக்குச் சுண்டிக்குளி புனிதர் யோவான் தேவாலயத்திலும், காலை 9:30 மணிக்கு நல்லூர் புனிதர் யாகோபு தேவாலயத்திலும் நடைபெறும் விசேட ஆராதனைகளில் திருவிருந்து ஆராதனைகளை ஒப்புக் கொடுத்து அருளுரைகள் நிகழ்த்துவார்.

ஆண்டகையின் வடபகுதி விஜயத்துக்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட் திரு சாம். டீ. ஹோர்சிங்டன் அடிகளார் மேற் கொண்டுள்ளார். (அ)

### மாவட்ட மாநாடு!

(யாழ்ப்பாணம்)

ஜெகோவாவின் சாட்சிகளின் ''ராஜ்யஒற்றுமை என்ற மாவட்ட மாநாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், அக்டோபர் 6ந் திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெறும். 9ம்திகதி முக்கிய நிகழ்ச்சிகளாக காலையில் நாடகமும், மாலையில் பகிரங்கச் சொற்பொழிவும் இடம் பெறும். (க)

# யாழ்ப்பாணத்துக்கு ஓர் பூரண பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்துக்குச் சகல பீடங்களையும் கொண்ட ஒரு பூரண பல்கலைக்கழகம் தேவை என்பதை முன்பு உணராதவர்களும் இப்பொழுது உணர்வார்கள் ஏனெனில் தென்னிலங்கையிலுள்ள பல பல்கலைக்கழகங்களில் படித்துக் கொண்டிருந்த ஏறக்குறைய 1800 மாணவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அகதிகளாக வந்துள்ளார்கள். அவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலேயே படிக்கவிரும்புகிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள மருத்துவ பீடத்திலும் பார்க்க கொழும்பிலுள்ள மருத்துவ பீடமே சிறந்ததென்று போனவர்களும் இப்பொழுது யாழ்ப்பாணத்தை நாடுகின்றனர்!

இவ்வளவு காலமும் கொழும்பு, மொறட்டுவை. பேராதனை முதலிய பல்கலைக்கழகங்களில் படித்து வந்த தமிழ் மாணவர்கள், பலவிதமான இன்னல்களையும் அவமானங்களையும் பொறுத்துக் கொண்டு படித்தார்கள். சென்ற காலத்தில் மாணவர்களே பெரும்பாலும் இவற்றைச் செய்துவந்தனர். இப்பொழுது ஆசிரியர்களும் மாணவர்களோடு சேர்ந்து கஷ்டங்களைக் கொடுக்கத் தொடங்கிவிட்டனர். பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகிகள் தங்களால் ஒழுங்கை நிலைநாட்டமுடியாமல் அங்கு ஒரு பொலிஸ் நிலையத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இப்பொழுதுள்ள நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அகதிகளாக வந்துள்ள மாணவர்களுக்கு உதவிசெய்யமுடியாத நிலையில் இருக்கிறது. விவசாயம், பொறியியல் முதலிய பீடங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பீடங்களிலும் இடவசதியின்மையால் மேலும் மாணவர்களைச் சேர்க்கமுடியமல் இருக்கிறது.

மருத்துவபீடத்தை எடுத்துக்கொண்டால் இப்பொழுதிருக்கும் மாணவர்களுக்கே வேண்டிய கட்டிடங்களும், வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை. மருத்துவ மாணவர்கள் பயிற்சி பெறும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மாணவர்களுக்கு தேவையான அத்தியாவசியமான வசதிகள்கூட இல்லை.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துககு வசதியான விளையாட்டு மைதானம் இல்லை. முன்பு விளையாட்டு மைதானமாக இருந்த இடத்தில் நூல்நிலையத்தைக் கட்டிவிட்டார்கள். கண்டியில் பல லட்ச ரூபா செலவில் அஸ்கிரியாவில் கிரிக்கெட் மைதானத்தை நிறுவியுள்ளனர். சமீபத்தில் பல கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து சுகததாச ஸ்ரேடியத்தைப் புனருத்தாரணம் செய்துள்ளார்கள். தெற்கே அள்ளிக் கொடுத்தால் வடக்கே கிள்ளிக்கொடுக்கலாமே!

யாழ்ப்பாண மாணவருக்கு ஓய்வு மண்டபம் இல்லை. (Student Centre) இதற்குவேண்டிய படம் எல்லாபவரைந்த பின்பு பணம் இல்லை என்ற சாட்டில் நிற்பாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் றுகுணையில் ஐம்பது கோடி ரூபா செலவில் பிரென்ஸ்சு கட்டிட நிபுணரால் உறுகுணைப் பல்கலைக் கழகத்துக்கு வேண்டிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் இவற்றைப்பார்வையிட்ட ரொனிடிமெல் திருப்தி தெரிவித்துள்ளார். அவர் அத்தொகுதிக்குப் பிரதிநிதியாக இருப்பதோடு நிதிமந்திரியாய் இருப்பது அப்பல்கலைக் கழகம் செய்த அதிஷ்டம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு இப்பொழுது அவசியந்தேவையானவை விவசாயபீடமும் பொருளியற் பீடமுமாகும். விவசாய பீடத்தை உடனே திருநெல்வேலியிலுள்ள அரசாங்கத் தோட்டத்தை (Trirunelvely Farm) மையமாக வைத்து ஆரம்பிக்கலாம். இது விஷய மறிந்தவர்களின் அபிப்பிராய மாகும். காலகதியில் கிளிநொச்சியில் கமவேலைக்கு ஏற்றமுறையில் விவசாயக் கல்லூரியை அமைக்கலாம்.

பொறியியற்பீடத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு உடன் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். உயிருக்கு ஆபத்தானஇடங்களில் போய்ப்படிப்பதற்குத் தாங்கள் தயாராக இல்லை என்று சென்றவாரம் யாழ்ப்பாணநகரமண்டபத்தில் நடந்த மகாநாட்டில் சில மாணவர்கள் கலாநிதி கல்பகே அவர்களுக்குக் கூறியுள்ளார்கள். அங்கேபோய்ப் படிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டால் தாங்கள் படிப்பையே நிறுத்திப் போடுவதாகக்கூறியுள்ளார்கள்.

யாழ்ப்பாண மக்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் இதுவரையிலும் அதிக ஊக்கங்காட்டவில்லை. யாழ்ப்பாண இளைஞர்களின் எதிர்காலம் இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியிலேயே தங்கி இருப்பதென்பதை நமக்களுக்குப் பல்கலைக் கழகத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் எடுத்துக் காட்டவேண்டும். யாழ்ப்பாண மக்கள் இப்பொழுது ஆலயங்களுககுச் சித்திரத்தேர் கட்டுவதிலும் இராசகோபுரம் அமைப்பதிலும் இலட்சக்கணக்கிற் செலவழிக்கின்றனர். இவை விரும்பத்தக்கவையே இவற்றோடு பல்கலைக்கழகத்தை கலைமகள் கோயிலாகக் கருதி இதிலும் கவனம் செலுத்தவேண்டும். தமிழ் இளைஞரின் எதிர்காலம் இதிற்றங்கிஉள்ளது.

பொறியியல் விவசாயத் துறை இவை இரண்டிலும் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் மிகவும் முன்னேறியுள்ளன. தக்கமுறையில் அணுகினுல் பொறியியற் பீடத்தையும் விவசாய பீடத்தையும் அமைப்பதற்குத் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் தமிழ்நாட்டு அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் போதிய உதவிசெய்யும். இவற்றிற்கு வேண்டிய வழிவகைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் எடுப்பார்களாக.

ச. அம்பிகைபாகன்

# மக்கள் கருத்து

### இந்தியாமீது பற்று

சாதி சமய பேதமின்றி விடுதலைக்காகப் போராடி எத்தனையோ உயிர்களைப் பறிகொடுத்துக்கொண்டிருக்கும் வேளையில் எமது எதிர்க்கட்சித் தலைவர் இங்கு நடந்த அட்டூழியங்களை விளக்கிச் சொல்ல வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பதை எல்லோரும் அறிவர். அவர் இந்தியாவில் துக்ளக் என்ற பத்திரிகைக்கு அளித்தபேட்டியில், தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தியா மீது இருக்கும் பற்று தமிழர் என்பதற்காக மட்டுமன்றி இந்துக்களாகவும் இருப்பதே காரணமெனக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆகவே, இந்துக்கள் அல்லாதவர்கள் இந்தியாமீது முழுமையாகப் பற்றுவைத்திருக்கவில்லை என்பது இதன் கருத்து.

நாம் ஒரே சமூகத்தவராக இருந்து ஒற்றுமையாகவும் இருப்பதையே நாம் விரும்புகின்றோம். சில காலங்களுக்கு முன் வண. பிதாக்கள் சிங்கராயர், சின்னராசா ஆகியோர் தாகியதையடுத்து 1982ம் ஆண்டு நத்தார் கொண்டாட்டத்தை கறுப்பு நத்தார் எனக் கொண்டாடவேண்டுமென்பதை நாம் முழுமையாகக் கண்டித்தோம். ஏனெனில், எத்தனையோ இளைஞர்கள் கைதாகியும் நாம் துக்கம் அனுஷ்டிக்காமல் 'குருக்கள்' என்பதற்காகத் துக்கம் அனுஷ்டித்தால் அது மதப் பிரச்னையாகிவிடுமெனக் கருதபபட்டது. எமது எதிர்க் கட்சித் தலைவர் சமயத்தைப் பிரித்துக் காட்டியிருப்பது கவலைக்குரியது.

இங்ஙனம்,

பயஸ்—ம

ஆனைக்கோட்டை.

## இடம்பெயர்ந்த நெடுந்தீவு மக்களுக்கு உடைகள்!

### செஞ்சிலுவைச் சங்கம் வழங்கியது

(நெடுந்தீவு)

வன்செயல்களினுல் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நெடுந்தீவுக்கு வந்த மக்களுக்கு யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கம் உடைகளை வழங்கியது. யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவி திருமதி தேவநேசன் நேசையா இங்குள்ள சுமார் 98 குடும்பங்களுக்கு இவற்றைக் கையளித்தார்.

நெடுந்தீவுக்கு வருகைதந்த மேற்படி சங்கத்தின் தலைவியையும் தொண்டர்களையும் வரவேற்று உரைநிகழ்த்திய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் உலகில் இன்னல்களுக்கு உள்ளாகும் மக்களின் நலனைக் கவனிப்பதிலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதிலும் செஞ்சிலுவைச் சங்கம் சிறப்பான பணிகளைச் செய்துவருகின்றது. சமீபத்தில் ஏற்பட்ட துக்ககரமான சம்பவங்களினுல பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் செஞ்சிலுவைச் சங்கம் எடுத்துள்ள நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இன்று திருமதி தேவநேசன் நேசையா பங்களா தேஷ் செஞ்சிலுவைச்சங்கத்தைச் சேர்ந்த திரு. அக்ரம் அவர்களும் தொண்டர்களும் இங்கு வருகை தந்து நெடுந்தீவு மக்களுக்கும் உதவியளித்துள்ளார்கள். யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவி என்ற உன்னதநிலையில் இருக்கும் திருமதி தேவநேசன் அவர்களின் தூய்மையான சேவையினுல் வன்செயல்களினுல் பாதிப்புக்குள்ளானவர்கள் அவற்றின் துயர நினைவுகளை மறந்து எதிர்கால அமைதியை நோக்கிச் செல்கின்றனர்'' என்றார்.

### வேலணையில் தொ. கல்விநிலையம்

(வேலணை)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகாவித்தியாலயத்தில் தொழிற் கல்வி நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. மு. சிவராசரத்தினம் தலைமையில் இத்திறப்புவிழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் காவலூர் தொகுதி எம். பி. கலந்துகொண்டார். (அ)

# இலங்கைத் தமிழர் பிரச்னை

# புரியாத ஜயகாந்தன்!

இலங்கை வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து, ஆதார பூர்வமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் மறைந்த தமிழறிஞரும், பழைய மேயருமான சா. கணேசன்.

''தமிழ் நாட்டிலிருந்து இலங்கை மீது படையெடுத்துச் சென்றனர் தமிழர்கள்; வென்றனர். பல காலகட்டங்களில் இலங்கையை ஆண்டனர். சிங்களவர்களின் முதன்மையான வரலாற்று நூலான மகாவம்சத்தில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது. இலங்கையில் நிலைத்து நின்று வந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கை நகரையும் நல்லூரையும் தலைநகரங்களாகக் கொண்டு ஒரு வலிமை பொருந்திய முழு உரிமை பெற்ற தமிழரசை அமைத்து, ஆண்டு வந்துள்ளனர்''

## ஈழம் எவர் பூமி?

— பலகாலத்துக்கு முன்னர் அவர் 'ஈழம் எவர் பூமி?' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இந்த விபரங்களைத் தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழியில், சிங்களவர்களாலேயே எழுதப்பட்ட கவிதை நூல்: 'கோகில சண்தேச' இந்தக்கவிதை நூலை ஆதாரமாகக் கொண்டு, அதில் தெரிவிக்கப்பட்ட தகவல் சிலவற்றை சா. கணேசன் தந்திருக்கிறார்.

## தமிழகத்தின் இதயக் குமுறல் - 9

''செண்பகப் பெருமாள் என்ற தமிழ் மன்னர் பெற்ற வெற்றிகள் நமது நெஞ்சங்களை சிலிர்க்க வைக்கும்படி இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளுக்குச் சிங்கள மன்னர்கள் திறைகொடுத்து வந்துள்ளார்கள். இந்தத் திறை கொடுக்கும் நிலையிலிருந்து சிங்கள மன்னர்களை காப்பாற்றிய பெருமை 'அழகக்கோனுர்' என்ற தமிழ் மன்னருக்கே உரியது;

''கி.பி. 1347 — 1619 வரை யாழ்ப்பாணத்தமிழ் மன்னர்களுக்கு சிங்கள அரசர்கள் திறை செலுத்தி வந்துள்ளார்கள்.

மறைந்த சட்ட மேதை மு. திருச்செல்வம் 'ட்ரயல் அற் பார்' விசாரணையில் வரலாற்றை எடுத்து வாசித்த போது, நீதியரசர்கள் அதனை மறுத்திடாது, நீதிமன்றப் பதிவுகளில் அந்தக்கருத்துக்கள் இப்போதும் வைக்கப்பட்டுள்ளதையும் சா. கணேசன் குறிப்பிட்டிருக்கிறார்.

திருச்செல்வம்: வாதம் 'இலங்கைத்தீவு இரு வேறு தேசிய இனங்களைக் கொண்டதாக இருந்து வந்துள்ளது. ஈழநாடு, சிறீலங்கா என்ற இரு நாடுகளாக இறைமையுடன் திகழ்ந்து வந்தன.''

''இரு வெவ்வேறு நாடுகளாகத் திகழ்ந்த இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றினுர்கள்; பின்னர் ஆங்கிலேயர் இருநாடுகள் மீதும் ஆதிக்கம் புரிந்தனர். காலஓட்டத்தில் மக்கள் தொகை அதிகமாகவுள்ள சிங்களவர்கள் இலங்கையில் ஆளும் வர்க்கமாகிவிட்டனர்!''

இவ்வாறுதான் இலங்கை வரலாறு ஏற்பட்டது என்ற கணேசன் கட்டுரையில் உண்மைகள் இல்லாமல் இல்லை!

இலங்கையின் இன்றைய வரலாறு —

சிங்கள நாடாக உலகப் படத்தில் காட்சியளிக்கிறது! உருவாக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை சுலபமாக மறைத்து விட முடியாது.

## தமிழகம் கண்ணீர் வடித்தது!

இலங்கைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இன வெறியும், அடக்குமுறையும், படுகொலையும்—

தமிழகத்தையும் ஒரு உசுப்பு உசுப்பி, தமிழ்ச் சகோதரர்களை மற்றோர் இனம் கொன்று குவிப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற உணர்ச்சி வெறியை ஏற்படுத்தியது.

தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் கண்ணீர் வடித்தன!

வீடுகள், வீதிகள், மேடைகள், சட்டமன்றங்கள், அரச அலுவலகங்கள்......

இவற்ருேடு, தமிழகப் பத்திரிகைகள் இலங்கைத் தமிழர்களின் வேதனைகளுக்காகத் தமது உணர்ச்சிகளை கொட்டித் தீர்த்தன.

இந்த நேரத்தில்—

கால் நூற்றுண்டு காலத் தமிழ் இலக்கிய வரலாறு பெருமைப்படக்கூடியவகையில் இலக்கியப் பணி செய்துவரும் எழுத்தாளர் ஜெயகாந்தன்—

இலங்கைத் தமிழர்களைப் பற்றிக் கவலைப்பட்டுத் தன் கைவண்ணத்தைக் காட்டியிருக்கலாம்! ஆனுல், இலங்கைத் தமிழர்கள் பிரச்னையைத் தெரிந்து கொள்ளாமல், வரலாறு தெரியாமல், வரலாறும் கற்பனை இலக்கியமென்ற எண்ணத்தோடு எழுதியிருப்பது தான் கவலையை அளிக்கிறது!

'தேவி' என்ற சஞ்சிகையில் 'எனது பக்கம்' என்று ஒரு பக்கத்தை வாரம் வாரம் எழுதி வருகிறுர்! அந்தப் பக்கத்தில் இலங்கைப் பிரச்னைகளைத் தொட்டிருக்கிறுர்:

''இலங்கையின் ஒட்டு மொத்த நலனுக்குத்தான் இந்தியா உதவும். சிங்களவர்-தமிழர் நல்லுறவை வளர்க்கத்தான் இந்தியா பாடுபடும். இலங்கைப் பிரச்னையில் நாம் தலையிடுவது சமாதான நோக்கத்துக்காகவே தான் இருக்கும்''.

தொகுத்துத் தருபவர்: ஈ. கே. ஆர்.

இந்தியாவின் முழுப் பொறுப்பையும் இந்திய மக்கள் தன்னிடம் என்னவோ ஒப்படைத்து விட்டதைப்போல ஜெயகாந்தன் எழுதியிருக்கிறுர்.

இத்துடன் விட்டாரா? ''ஈழத்து சிங்கள மக்களுக்கும், ஈழத்துத் தமிழ் மக்களுக்கும் பகையே இல்லை! இரண்டு மத· இரு மொழியினர் கூட்டுக்கு இலங்கை ஒரு எடுத்துக்காட்டாக இருந்தது!'' என்று ஜெயகாந்தன் மேலும் எழுதுகிறுர்.

இன்னெரு இடத்தில் எழுதுகிறுர்: ''கடந்த முப்பது ஆண்டுகளாக இலங்கையில் கலவரங்கள் நடக்கின்றன''— தனது வாக்குமூலம்தின் மூலம், ''இரு மொழி பேசும் மக்கள் கூட்டுக்கு இலங்கை ஓர் எடுத்துக்காட்டு'' என்ற தன் கருத்தை முன்பின் முரணுக்கிக் கொள்கிறுர்

ஜெயகாந்தனுக்கு இலங்கை அரசியல்ஞானம் சூனியம்என்பதற்கு அவரது இனெருவிளக்கம் சான்று பகர்கிறது:

''. இந்திய ராணுவம் இலங்கையின் அமைதியைக் குலைக்கிற வன்முறையாளர்களையும், பிரிவினையாளர்களையும் அடக்கி, ஒன்றுபட்ட அமைதியான இலங்கையை உருவாக்கத்தான் போகுமேதவிர, ஒருபோதும் இந்தியா இலங்கையை இரண்டாக்க உதவிசெய்யாது! பிரிவினைவாதிகளை ஆதரிக்காது! விடுதலைப் புலிகள் இயக்கம் வன்முறை இயக்கம் என்பது மட்டுமல்ல; அது பிரிவினை இயக்கமுங்கூட''.

—இது கதை மன்னரின் அருள்வாக்கு.

என்னவோ, விடுதலைப் புலிகள் வானத்திலிருந்துவந்து திடீரெனக் குதித்து, அதிரடியாகக் கழுத்தைப் பிடித்துத் திருகி, இரத்தத்தைக் குடிப்பதைப் போல ஏதோ எழுதியிருக்கிறுர்.

ஜெயகாந்தன் பொறுப்பற்ற விதமாக 'வன்முறை' பிரிவினை என்று உளறியிருக்கிறுர்!

விடுதலை இயக்கங்களின் வரலாறு தெரிந்த ஜெயகாந்தன் இப்படியெல்லாம் எழுதலாமா!

'வங்கத்தைத் தந்தது இந்தியா' என்று முழங்கும் ஜெயகாந்தன்,

'இலங்கையின் அமைதிக்கே இந்தியா உதவும்' என்கிறுர்.

கம்யூனிஸ்ட் என்று தன்னைச் சொல்கிறுர் ஜெயகாந்தன்: அவருக்கு இலங்கையின் நிலை நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும்!

கியூபாவின் பிடரல் காஸ்ட்ரோவை அணிசேரா நாடுகள் மகாநாட்டில் நமது ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சந்தித்தபோது, 'இலங்கைக்கு நீங்கள் வரவேண்டும்' என்று அழைப்பு விடுத்தார்.

காஸ்ட்ரோ என்ன சொன்னுர் தெரியுமா? ''உங்கள் எஜமானர் றீகனிடம் இதற்குச் சம்மதம் பெற்றுவிட்டீர்களா?'' என்று கேட்டார்.

காஸ்ட்ரோவுக்கு 'புரிந்த இலங்கை அரசியல் ஜெயகாந்தனுக்குப் புரியவில்லையே!

## விடுதலை கருத்து

தமிழகத்தின் தந்தை என்று பெருமைப்படக்கூடியவர் பகுத்தறிவாளர் பெரியார்! தமிழகத்தில் ஆட்சி நடத்திய அண்ணுவும், கலைஞரும், இப்போதைய முதல்வர் எம். ஜி. ஆரும் இவரது குழந்தைகள்!

இவர் சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிடும் பணியில் 'விடுதலை' என்றபத்திரிகையை ஆரம்பித்தார். இன்று அவரது பணியைத் தொடர்பவர் தளபதி வீரமணி. திராவிடக் கழகத்தின் பொதுச்செயலாளர். இவர்தான் 'விடுதலை'யின் ஆசிரியர்

இலங்கைத் தமிழர் பிரச்னையை நன்கு உணர்ந்தவர் வீரமணி. தினசரிப் வெளியாகும் பத்திரிகையில் 'விடுதலை'யில் பிரசுரமான கட்டுரையின் ஒரு பகுதி வருமாறு:

''அகதிகள் குடும்பத்தவர்களை-அகதிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு தமிழகப்பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கல்வி வசதிகளை தமிழக அரசு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

''வாழ வழியற்று, வகையற்றுத்தமிழகம் வருவோர்க்கு வாழ்க்கை வசதிகளை தமிழக அரசு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்!

''தமிழர் பிரச்னையாக சர்வதேசப் பிரச்னையாக உருவாக்க தமிழக அரசு சகல பிரச்சார-ராஜதந்திர நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

''சிறைக்கூடங்களிலே கொலையுண்ட தமிழ்க்கைதிகள் பற்றி விசாரணை இல்லை!''

(இன்னும் வரும்)

---

# வறட்சியைத் தாங்கும் நல்ல இன விதை நெல்

(மாவிட்டபுரம்)

வறட்சியை தாங்கக் கூடியதும் நல்ல விளைவைத் தரக் கூடியதுமான நல்ல இன நெல் இனங்களை விவசாயிகள் செய்கைபண்ண முன்வரவேண்டுமென கீரிமலை விவசாய போதனுநிலைய விவசாய போதனுசிரியர் திரு ஆர். கருணுகரன் கோரியுள்ளார்.

வடபகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளில் தற்போது நெற்செய்கைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால் விவசாயிகள் வடபிரதேசத்தின் சூழ்நிலைகளுக்கு பொருத்தமான நெல்லினங்களை தெரிவு செய்து கொள்ளவேண்டுமென அவர் கோரியுள்ளார்.

4 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியதும், வரட்சியை தாங்கக்கூடியதும், கூடியவிளைவைத்தரக்கூடியதுமான ''பினிலொட்'' என்னும் நெல் வர்க்கமும், மூன்றரை மாதத்தில் அறுவடை செய்யக் கூடிய பி. ஜி 34-6 என்னும் வர்க்கமும்வடபகுயில் செய்கை பண்ண உகந்தது என திரு கருணுகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நெல்லினங்களின் விதைநெல் போதுமான அளவு கீரிமலை விவசாய போதனு நிலையத்தில் இருப்பதாகவும் விவசாயிகள் அதனை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளார்.

கடந்த ஆண்டுகளில் வடக்கில் புதிதாக பரீட்சித்து பார்க்கப்பட்ட மேற்படி இரு இனங்களும் நல்ல விளைவைத் தந்தமை குறிப்பிடத்தக்கதெனவும் அவர் குறிப்பிட்டார்.

---

வட்டு.பகுதிக்கு

# ஒரேநாளில் ஒய்வூதியம் வழங்கவேண்டும்

(பண்டத்தரிப்பு)

''வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டு. மேற்கு மற்றும் சங்கரத்தை, அராலி ஆகிய பகுதிகளை சேர்ந்த ஓய்வூதியப்பணம் பெறுபவர்கள் தற்போது யாழ் கச்சேரிக்கு சென்று தமது ஓய்வூதியப்பணத்தை பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதால் இந்த ஓய்வூதியப்பணத்தை வட்டுக்கோட்டைத் தபால்நிலையத்தில் வைத்து பொலிஸ் பாதுகாப்புடன் ஒரே நாளில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.''

இவ்வாறு வடபிராந்திய தபால்சேவை அத்தியட்சகருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர்ஒன்றில் சித்தன்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு எஸ் குலசூரியன் கேட்டுள்ளார். சித்தன்கேணி உபதபால் நிலையம் மீண்டும் திறக்கப்படும்வரை ஓய்வூதியம் பெறுபவர்களின் நலன்கருதி மேற்படி கோரிக்கையை செயல் படுத்துமாறும் அவர் இந்த மகஜரில் மேலும் கேட்டுள்ளார்.

இந்த மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிடர், யாழ். பொலிஸ் அதிபர், வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

---

# அகதிகளை மகிழ்விக்க நாடகம்

(மட்டுவில்)

கைதடி அகதிக்ள் முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்கு புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் நோக்குடன் கலை மன்றங்கள் புதிய கருத்துள்ள நாடகங்களை மேடையேற்றுகின்றன.

சாவகச்சேரி சித்திவிநாயகர் கலை மன்றத்தினரும் தேசிய இளைஞர் மன்றத்தினரும் சேர்ந்து திரும்பிப் போகலாமா? என்ற வடமோடிக் கவிதை நாடகம் ஒன்றை மேடையேற்றினர். (அ)

---

# சிறையிலிருந்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமச்சந்திரன் ஒரு கேடியென்றும், பல குற்றச் சம்பவங்கள் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சமூகவிரோதி எனக் கணிக்கப்பட்டு இயக்கம் ஒன்றினல் இவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார் எனப் பின்னர் தெரியவந்துள்ளது.

இறந்து கிடந்த இவருக்குப் பக்கத்தில் குறிப்பிட்ட இயக்கத்தினரால் எழுதப்பட்ட பிரதி ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது

கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இவர் கடந்த ஆகஸ்ட் மாத முதல் பகுதியில்சிறைச்சாலையிலிருந்து தப்பியோடி தலைமறைவாகி இருந்தார். இவருட்பட 12 சிறைக்கைதிகள் தப்பி ஓடியது குறிப்பிடத்தக்கது. (மா)

---


## Vacancies

For Sea - going vessels

Master.
Chief Mate.
2nd Mate.
3rd Mate.
3rd Mate (Jr).
Radio Officer.

Bosun (Supervisor)
Carpenter.
Able Seaman/QM.
Ordinary Seaman.
Deck Boy.
Helmsmen.

Chief Steward.
2nd Steward.
Mess/Pantry Boy.
Chief Cook.
2nd Cook.
Laundryman.

Chief Engineer.
2nd Engineer.
3rd Engineer.
4th Engineer.
Chief Electrician.
Asst: Electrician.

Motorman.
Oiler
Fireman.
Wiper

Construction & Development Co. Ltd.

37, S. de. S. Jayasinghe Mawatha, Nugegoda.

Labour Licence No. 96.

(9083) Ref. No. FE/6/FEA/98/4308

### தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில்

# புற்றுநோய் சிகிச்சை நிலையம்

## பூர்த்தியாகியும் இயங்க முடியாத நிலை!

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைவளவில் அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் யந்திர சாதனங்கள் யாவும் இணைக்கப்பட்டு விட்டன. ஆனாலும். வைத்திய அதிகாரியும், மருந்துவகைகளும் இல்லாமையினால் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி புற்றுநோயாளர்கள் புற்றுநோய்க்கு சிகிச்சை பொறுவதனால் மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியிருந்த நிலையைப் போக்க தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் புதியதோர் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை அமைக்கத்திட்டமிடப்பட்டு கட்டிட வேலைகளும் இயந்திர சாதனங்களின் இணைப்பும் தற்போது பூர்த்தியாகிவிட்டன. இந்நிலையத்திற்கு வேண்டிய மருந்து வகைகளும், வைத்திய அதிகாரியும் இல்லாமையால் இந்தபுற்றுநோய் சிகிச்சைநிலையம் இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

வடபகுதியிலிருந்து புற்றுநோயாளர்கள் பலர் கொழும்பு சென்று மகரகம புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தனர். சமீபத்திய கலவரங்களையடுத்து அவர்கள் சிகிச்சையையும் நிறுத்திக்கொண்டு வட பகுதிக்கு திரும்பி விட்டதால் அவர்கள் இங்கு புற்றுநோய்க்கு சிகிச்சைபெற முடியாமல் அவதிப்படுவதா தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை கூடிய விரைவில் இயங்கச்செய்ய ஆவன செய்ய வேண்டுமெனகோரப்படுகிறது

---

# கருவாட்டுப் பார்சல் மறைவு; 3 சந்தேகநபர் கைது!

(மன்னார்)


வெளியூருக்கு அனுப்புவதற்காக தலைமன்னார் ரயில்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட கருவாட்டுப்பார்சல்களில் 400 ரூபா பெறுமதியான கருவாட்டுப்பார்சல் ஒன்று திடீரென மறைந்ததையடுத்து ரயில நிலையத்தில் கடமையாற்றிய 3 ஊழியர்கள் தலைமன்னார்பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது வெளியூருக்கு அனுப்புவதற்காக பி. எச்சநாயக்க என்பவர் தலைமன்னார் ரயில் நிலையத்தில் 4 கருவாட்டுப் பார்சல்களை ஒப்படைத்தபின் ஒரு கருவாட்டுப்பார்சல் திடீரென மறைந்தது. இச்சம்பவம் பற்றி ரயில் நிலைய அதிகாரியிடமும் தலைமன்னார் பொலிசாரிடமும் புகார் செய்யப்பட்டதையடுத்து திடீரென மறைந்த கருவாட்டுப்பார்சல் மீட்கப்பட்டதுன் ரயில் நிலையத்தில் கடமையாற்றிய 3 ஊழியர்களும் பொலிசாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். (க)

---

# பரி. யோவான் வெற்றிக்கு

### உதவிய உப காப்டன்



யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணப் பகுதிக் கல்லூரிகளுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்டவர்களது கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ். பரியோவான் கல்லூரி இரண்டாவது வருடமும் வெற்றிக்கேடயத்தைத்தட்டிக் கொண்டது.

பரியோவான் கல்லூரியின் உதவிக்காப்டன் ஆனந்தராஜன் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிராக 50 ஓட்டங்களையும் யாழ். இந்துக் கல்லூரிக்கெதிராக 51 ஓட்டங்களையும் கந்தானை டீமாசிடோனு கல்லூரிக்கெதிராக ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும் பெற்று கல்லூரியின் வெற்றிக்கு உதவினார்.

---

### காங்கேசன் சிமெந்து

# ரயில் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது

(மாவிட்டபுரம்)

சமீபத்திய கலவரங்களின் பின்னர் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு ரயில் மூலம் 55 ஆயிரம் பைக்கற் சிமெந்து முதன் முதலாக நேற்று முன்தினம் எடுத்துச் செல்லப்பட்டது.

சமீபத்திய கலவரத்தை யடுத்து ரயில் சேவைகள் தடைப்பட்டதால் புகையிரதம் மூலம் கொழும்புக்கு சிமெந்தை ஏற்றிச் செல்வது நிறுத்தப்பட்டிருந்தது.

புகையிரத மூலமான சிமெந்து விநியோகம் நேற்று முன்தினம் ஆரப்பமானது. காங்கேசன்துறையிலிருந்துகொழும்புக்கு சென்ற இப்புகையிரதத்தில் 260 பைக்கற்றுகள் அடங்கக்கூடிய 15 பெட்டிகளும் 520 பைக்கற்றுகள் அடங்கக்கூடிய 2 பெட்டிகளும் இணைக்கப்பட்டிருந்தன.

இச்சிமெந்து கொழும்பிலுள்ள சிமெந்து களஞ்சியத்திற்கு நேரடியாக எடுத்துச் செல்லப்படுவதாகவும் இது தென்பகுதியில்நிலவும் சிமெந்து தட்டுப்பாட்டை நீக்க உதவுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் இவ்வாறு புகையிரத மூலம் சிமெந்தை கொழும்புக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

### நீதிமன்றம் செல்லவிருந்த

# 1600 சிறு சச்சரவுகளை

## இணுவில் சமாதான சபை தீர்த்தது!

(மாவிட்டபுரம்)

இணுவில்சமாதானசபையின் முயற்சியால் கடந்த இரண்டரை வருடத்துக்குள் நீதிமன்றம் செல்லவிருந்த சுமார் 1600 சிறுசச்சரவுகளை சமாதான முறையில் தீர்த்துவைக்கப்பட்டன.

இந்தச் சமாதான சபையின் நடவடிக்கைகள் கடந்த சில வாரங்களாக நிறுத்தப்பட்டிருந்தது. சமாதான சபையில் உள்ளவர்கள் அகதிகள் நலன் பேணுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தமையே இதற்கு காரணம். ஆனல் தற்போது மீண்டும் இச்சபை இயங்க ஆரம்பித்துள்ளது.

இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் ஞாயிறுதோறும் இச்சபைகூடி முறைப்பாடுகளை ஆராயுமெனவும், தற்போது புதிய முறைப்பாடுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சமாதான சபையின் தலைவராக திரு தி.சி. சண்முகலிங்கமும், செயலாளராக திரு. தி. புரந்திரராசாவும், மற்றும் பிரதேசசபைத்தலைவர் செ. இலகுநாதன், சர்வோதய இயக்க உடுவில் கிளைத்தலைவர் திரு. தில்லைநாதன், இணுவில் அமெரிக்கமிஷன் பாடசாலை அதிபர் திரு. சோதிபெருமாள் கிராமசேவை அலுவலர்கள் எஸ். சச்சிதானந்தன், திரு. ஆறுமுகம், திரு. வேலும் மயிலும், திரு.சி. தியாகராஜா ஆகியோர் உட்பட 15 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

மக்கள் மத்தியில் எழும் குடும்பப் பிரச்னை, காணிப் பிரச்னை, கொடுக்கல் வாங்கல் பிரச்னைபோன்றவை இச்சபையால் சுமுகமாக தீர்த்து வைக்கப்படுகின்றன. முன்மாதிரியானதோர் சமாதான சபையாக விளங்கும் இணுவில் சமாதான சபையை மானிப்பாய் எம். பீ. திரு. வி. தர்மலிங்கம் பெரிதும் பாராட்டியுள்ளார்

---

# சான்றிதழ்கள் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை குடும்பத்திட்டச் சங்க செயலாற்றுப் பிரிவினால் கடந்த பெப்ரவரி மாதம் நடத்தப்பட்ட குடும்பநலத் திட்ட பயிற்சிவகுப்பில் கலந்துகொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கல்லாரை குடும்பநலத் திட்டத் தலைவர் டாக்டர் ஆ.சிவபாதம் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

இலங்கை குடும்பத்திட்டச் சங்க யாழ். மாவட்ட உத்தியோகத்தர் திரு ஏ,எஸ்.பூவேந்திரன்,செயலாளர் ஜே.பி.குணரத்தினம் ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

---

# நெடுந்தீவில் மீன்பாவனையாளர் அதிருப்தி

(நெடுந்தீவு)

இங்குள்ள மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களைக் குறிகாட்டுவானுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். இதனால் நெடுந்தீவில் பாவனையாளர்களுக்கு மீனுக்குப் பெரிதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெளியிடங்களில் இருந்து நெடுந்தீவுக்குத் தொழிலின் நிமித்தம் மீனவர்கள் வாடியமைத்துத் தங்கியிருந்து தொழில் செய்வதை முற்றாக எதிர்க்கும் உள்ளூர் மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை வெளியிடங்களில் விற்பனைக்காக எடுத்துச்செல்வது நியாயமற்றது என்ற கருத்தும் பொதுமக்களிடையே நிலவிவருகிறது. (அ)

---

### காங்கேசன்துறையில்

# உணவு விடுதிகள் மீது கடும் கண்காணிப்பு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையிலுள்ள உணவு விடுதிகள் மீதும் திறந்த நிலையில் உணவுபண்டங்களை விற்பவர்கள் மீதும் கடும் கண்காணிப்பு செலுத்தப்படஉள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது வயிற்றோட்ட நோயும் சிறுபிள்ளைவாத நோயும் பரவி வருவதால் காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் முன்னெச்சரிக்கையாக இந்நோய்களைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்களது ஒத்துழைப்பையும் கோரியுள்ளார். சுகாதாரக் கேடாக இருக்கும் உணவு விடுதிகள் பற்றியும் திறந்த நிலையில் உணவுப்பண்டங்களை வைத்து விற்பவர்கள் பற்றியும் சுகாதாரப் பரிசோதகர்கள் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் இதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு தரவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

சுத்தமான நீரை அருந்துதல் சுகாதார முறையில் உணவை பேணுதல் பொதுக் கிணறுகளுக்கு குளோரின் போடுதல் குப்பை கூளங்களை அகற்றுதல் மலகூடங்களை மட்டுமே உபயோகித்தல் போன்ற நடைமுறைகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

சிறுபிள்ளைவாத தடுப்பு மருந்து பெறுதுள்ள 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு தடுப்பு மருந்தை பெற்றுக் கொள்ளுமாறும் ஆலோசனை கூறியுள்ளார்.

---

# மறைவுக்கு கண்ணீர் அஞ்சலி

(மட்டுவில்)

''மட்டுவில் கல்வம் விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும் மட்டுவில் விவசாய குழுத்தலைவருமான மட்டுவில் நடுவில் என்ற சிறப்புப் பெயருடன் இருந்து வந்த இரா.சந்திரசேகரத்தின் மறைவு எமது சமுதாயத்திற்கே ஒருபேரிழப்பாகும்'' என்று வலி கிழக்கு கோப்பாய் பிரதேச அபிவிருத்திச் சபைத் தலைவரும் புத்தூர் கிராமோதய சபைத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு சதாலோகீஸ்வரன் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

முன்னாள் வடமாநில கல்வி அதிபதி திரு தி.மாணிக்கவாசகர் தமது இரங்கலுரையில் தாம் பதவி வகிக்க ஏதுவாக இருந்து உறுதுணை புரிந்து அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கொண்டு சென்று சேர்த்து அடிகோலிய பெரியார் என்று கூறினார்.

வித்துவான் சிவபாதசுந்தரனும், முன்னாள் மட்டுவில் மகா வித்தியாலய அதிபர் திருநீலகண்டன் மனோகரன் ஆகியோர் ஆங்கிலக்கல்வியை இவரிடமே சிறுவயதில் ஆரம்பித்ததாக கூறினார்கள்.

---

# அகதிகள் சிரமதானம்

(மட்டுவில்)

பொதுமக்கள் சுகாதாரத்தைப் பாதிக்கும் கழிவு நீரை புதிய வாய்க்கால் மூலம் வெளியகற்ற அகதிகள் சேர்ந்து சிரமதானம் செய்தனர்.

கைதடி முகாமில் அமைந்துள்ள அகதிகள் முகாம் கழிவு நீர் பிரதான வீதிக்கு அருகாமையிலும் கைதடி அரசினர் ஆயுள் வேத வைத்திய சாலைக்கு முன்புறமாகவும் தேங்கி நின்று சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்க ஏதுவாக இருந்ததினாலேயே இதை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது

கைதடி அகதிகள் முகாமில் உள்ள அகதிகள் சேர்ந்து சிரமதான மூலம் புதியவாய்க்கால் ஒன்றை வெட்டி இக்கழிவு நீரை அப்புறப்படுத்துகிறார்கள். (அ)

---

# உருளைக்கிழங்கு விநியோகம்

(சாவச்சேரி)

மீசாலை கமத்தொழில் சேவை நிலையத்திற்குட்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு மிகவிரைவில் விதை உருளைக்கிழங்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

விதை உருளைக்கிழங்குகோரி பலவிவசாயிகள் விண்ணப்பம் செய்திருந்தபோதிலும், கடந்த வருடம், இதே உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் விதை உருளைக்கிழங்கு விநியோகம் செய்யப்படும் என கமநல சேவை நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க)

---

# 'ஆசிரியை மறைவு பேரிழப்பு'

(அரியாலை)

''சேவை மனப்பான்மை கொண்ட ஆசிரியையாகவும், சிறந்த சமூக சேவகியாகவும், நல்ல மனைவியாகவும் வாழ்ந்து தனது வாழ்க்கையை முடித்துக் கொண்ட ஆசிரியை திருமதி. யோகம்மா துரைசாமியின் திடீர் பிரிவு பேரிழப்பாகும்'' என்று நல்லூர் ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் திரு. ப. கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற திருமதி. யோகம்மா துரைச்சாமி ஆசிரியையின் இறுதிக்கிரியையின் போது அஞ்சலி செலுத்திப் பேசுகையில் குறிப்பிட்டார். (அ)

---

# குடிநீர் விநியோகம்

(மன்னார்)

ஏற்கனவே வழங்கப்பட்டு இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விடத்தல்தீவு கிராமத்திற்கான குடிநீர் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விடத்தல்தீவு கிராமோதய சபைத் தலைவர் திரு ஜேம்ஸ் மன்னார்மாவட்ட அமைச்சுடன் தொடர்பு கொண்டதையடுத்தே விடத்தல்தீவு கிராமத்திற்கான குடிநீர் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விடத்தல்தீவு கிராமத்திற்கு தினமும் 4200 கலன் குடிநீர் விநியோகிக்கப்பட்டுவருகிறது. (க)

ராஜா (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்—அம்பிகா
கன்னொப்பட்டி கிஷோரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)

ஹரன் (யாழ்.நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜேஷ்
துணை
(கலர்)

ராணி (யாழ். நகர்)
10-10, 2-30 6-15
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

லிடோ (யாழ். )
தினசரி
10-30, 2-15, 5-30, 9-30
விடியும்வரை
காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15
4-45 and 7-00 p.m.
IMPOSSIBLE KID
(adults only)
From 5-10-83
Robert Shaw in
FORCE 10 FROM
NAVARONE
(Action Packed)

சாந்தி யாழ்நகர்
10-30, 2-15, 4-45, 7-00
BURT REY NOLDS
IN A DUAL ROLE
"Sharky's
Machine"
Color- Action Filled
—Adults Only—

மனோகரா
(யாழ்நகர்)
10-30, 2-15, 4-45.
7-00 p.m.
Robert Redford
Yaphet Kotto
Jane Alexander and
Murray Hamilton
BRUBAKER
The most wanted man
in Wakefield Prison

றீகல் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00 மணி
எம்.ஜி.ஆர்.. லதா,
(இருவேடங்களில்)
மஞ்சுளா, நம்பியார்,
அசோகன்
நேற்று இன்று நாளை
—ஈஸ்ட்மென்கலர்—

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
பெரிய இடத்து பெண்
8th to 11th
Sean Connery in
BRIDGE TOO FAR
(War Film)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Bruce Lee in
ENTER THE
DRAGON
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்

# இன்றைய பலன்

புரட்டாதி 18-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(4-10 83)

மேடம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள் பெரியோர் ஆசியும் அவசியம் கிடைக்கும்.

இடபம்: தொழில்துறையில் முன்னேற்றம் தென்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் வணிகத் துறையில் தொடர்புகள் ஏற்படும் சிலருக்கு நன்மையான இடமாற்றமுண்டு.

மிதுனம்: எண்ணியது எண்ணியபடி நடக்கும் உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத் திறமையில் முதலிடம் பெறுவார்கள் மக்கள் செல்வாக்கு மனதைக் குளிரவைக்கும் அதிஷ்டதினம்.

கடகம்: பணம் பலவழிகளிலும் செலவாகும் அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும் உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு கணைதொடுப்பதற்கு முனைவர் நிதானம் வேண்டும்.

சிங்கம்: வாழ்க்கையில் புதிரான நிலை உருவாகும் எதிலும் தாக்கமனப்பான்மை தென்படும் சினேகித வழியால் கவலைகள் தோன்றக்கூடும் விவசாயிகள் ஏமாற்றத்திற்கு இடமுண்டு.

கன்னி: சுற்றுடலில் உங்கள் செல்வாக்கு வளரும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்துவீர் குடும்பத்தில் பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர் புத்திரர் புகழ் உண்டு.

துலாம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் மேலிடத்தின் செல்வாக்கு பாதிக்கப்படலாம் புனைந்துரைகளினால் மனது புண்படும்.

விருச்சிகம்: அந்தஸ்து உயரும் எதிர்பார்த்த உதவிக்கு உயர்வு தென்படும் எதற்கும் முன்னேடி நடவடிக்கை எடுக்கப்படும் வழக்கு விவகாரங்களிலும் வெற்றியுண்டு வாகனசுகமுண்டு.

தனு: நல்லதைச் செய்வீர்கள் நலன் பெருகும் பிரமுகர்கள் உங்களைத்தேடி வருவார்கள் சமூகத்தில் மதிப்பு உயரும் கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ்குவியும்

மகரம்: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம் வாழ்க்கையில் கடன் தொல்லை அதிகரிக்கப்படும் சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு தெய்வ நம்பிக்கை வேண்டும்.

கும்பம்: எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும் களஸ்திரவழியால் பொருள்வரவும் உண்டு: பெரியோர் மதிப்பும் கிடைக்கும் பிள்ளைகளின் கல்வியிலும் விளையாட்டிலும் முன்னேற்றமுண்டு.

மீனம்: பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள் சிறிய விடயத்திற்குக்கூட குறைகேட்க நேரிடும் கடற்றொழிலில் ஈடுபடுவோர் கவனம் வேண்டும்.

சோதிடகலாநிதி
திருநெல்லை
க. வேலுப்பிள்ளை

# "வைத்தியர்களின் சேவை கடவுள் பணிக்குச் சமமாகும்"

(புங்குடுதீவு)

''கோவில்கள், கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள் எல்லாம் மனிதர்களைப் புனிதர்களாக்கவும், புத்திசாலிகளாக்கவும், ஆரோக்கியர்களாக்கவும் தோன்றிய அமைப்புக்களாகும். அர்ச்சகர்களும், ஆசிரியர்களும், மருத்துவர்களும் ஆற்றுகின்ற பணிகள் கடவுள் பணிகளாகும். இவர்களுடைய பணிகளில் அக்கறையீனமும் அசமந்தமும் அலட்சியமும் இருக்குமாஞல் ஒரு நாட்டின் நல்வாழ்வு சீரழிந்துவிடும்.''

இவ்வாறு புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய ஐக்கிய நாடு தொண்டர்சபையைச் சேர்ந்த டாக் எஸ். ஓங்காயி மாற்றலாகி பர்மாவுக்குச் செல்லுவதையிட்டு பணியாளர்களால் நடாத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பிரதம விருந்தினராய் கலந்துகொண்ட புலவர் ஈழத்துச் சிவானந்தன் உரையாற்றுகையில் கூறினர்.

டாக்டர் எஸ். இளையதம்பி இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினர்.

புலவர் சிவானந்தன் தொடர்ந்து பேசுகையில்: ''வைத்திய கலாநிதிகளின் சேவை கடவுட் பணிகளுக்குச் சமமானதாகும். கடவுளின்பிரதிநிதிகளாகவே இவர்கள் தங்களைக்கருதிக்கொள்ளவேண்டும். மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி தீராதநோய் தீர்த்தருளும் கடவுளையும் வைத்தியநாதனுகவேபோற்றுகின்ருேம். தென்தமிழ் நாட்டு வைத்தீஸ்வரன்கோவில்இதற்கோர்எடுத்துக்காட்டாகும். நோய்நாடி, நோய் முதல்நாடி, அதுதவிர்க்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல் புரியும் மருத்துவர்கள், சேவையில் இனக்குரோதமோ; மொழிக்குரோதமோ இருக்கக் கூடாது. மனித உயிர்கள் அனைத்தும் கவனிப்புக்கும், கரிசனைக்கும் உரியன என்றும் கடவுட் கருணை மருத்துவர்கள் கருத்தில் இருக்கவேண்டும். டாக்டர் ஓங்காயி அவர்கள்இந்தப்பண்புகள் நிறைந்தவர். ஐக்கிய நாடுகள் தொண்டர் சபை உறுப்பினர் என்ற வகையில் அவரிடம் இயல்பாகவேஅமைந்திருந்த தொண்டுமனப்பான்மையை, மக்கள் பற்றினை நாம் பாராட்டவேண்டும்'' என்று கூறினர்.

டாக்டர் கே. மகாலிங்கம் பேசுகையில்; ''டாக்டர் ஓங்காயி தானும் இயங்கி எங்களையும் இயக்கி, தொழிலாளர்களையும் ஊக்கப்படுத்தி பொதுமக்களையும் உற்சாகப்படுத்தி சேவைசெய்தார். இவருக்குப் பிரியாவிடைகொடுப்பதில் மனம்வேதனைப்படுகிறது'' என்று கூறினர். திருவாளர்கள் கே. வர்ணநாதன், கே. கந்தசாமி, ஐ. தில்லையம்பலம், செல்வி எஸ். மலர் ஆகியோரும் பேசினர். பணியாளர்கள் சார்பில் டாக்டர் ஓங்காயிக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

## "ஆத்மீகபலத்தால் வெல்லலாம்"

(மாவிட்டபுரம்)

''சைவத்தமிழ் மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள இன்றைய துன்பநிலையில் இறையுணர்வு பெற்றுஎமது ஆத்மீக பலத்தை வளர்த்துக்கொள்ள முன்வர வேண்டும். எந்த ஆயுதபலத்தையும் ஆத்மீக பலத்தால் வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கையுடன் நாம் செயல்பட வேண்டும்''.

இவ்வாறு ஏழாலை வடக்கு ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற விழாவொன்றில் சொற்பொழிவாற்றிய ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. சக்திகிரீவன் கூறினர்

## யாழ். மாவட்ட கள்ளுச் சங்கங்கள் மகாநாடு இன்று ஜி. ஏ. கூட்டுகிருர்

(புலோலி நிருபர்)

யாழ். மாவட்டத்தில் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களைத் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் பற்றி ஆராயும் முகமாக யாழ். அரச செயலகத்தில் மகாநாடு ஒன்று நடைபெற உள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா யாழ். மாவட்டத்தில் உள்ள பதினெட்டுத் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுடனுன இம்மகாநாட்டை ஏற்பாடு செய்திருக்கிருர். இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணிக்கு இம் மகாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகாநாட்டில் பனை அபிவிருத்திச் சபைத்தலைவர், மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர், பருத்தித்துறை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் கலால் அத்தியட்சகர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடபகுதியில் ஒரு இயக்கத்தினர் கள்ளுத்தவறணைகளை மூடுமாறு எச்சரித்து வருவதுடன் கள்ளுத்தவறணைகளைத் தீக்கு இரையாக்கி வருவதினுல் தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிப்பு அடைந்து உள்ளதுடன், சீவல் தொழிலாளர்கள் குடும்பங்கள் இதனுல் வறுமையில் வாட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

## நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் நுளம்புத்தொல்லை மிகவும்அதிகரித்துள்ளது. இந்த நுளம்புகளின் தொல்லையால்மக்கள் இரவில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாது மிகவும் சிரமப்படுவதாகவும், சுகாதார பகுதியினர் நுளம்பு கொல்லி மருந்துகளை தெளிக்க நடவடிக்கைமேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

## உணவுப் பொருள் அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம், கலவரங்களினுல் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்துள்ள மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் ஒன்ருன பாதகல் அகதிகள் முகாமுக்கு சுமார் இரண்டாயிரத்து 500 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களைச் சேகரித்து அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

லதா (கோண்டாவில்)
தினசரி 2-30, 6-30
சிவாஜி
நடித்த
சரஸ்வதிசபதம்

## நோயாளர்கள் பாதிப்பு

(மன்னர்)

நாட்டில் அண்மையில் இடம் பெற்றவன்செயல்களின்போது தமது சொந்த இடங்களுக்குச் சென்ற விசேட வைத்திய நிபுணர்கள் மீண்டும் கடமைக்குத் திரும்பாததால் மன்னர் அரசினர் ஆதாரவைத்திய சாலையில் வைத்திய பரிசோதனைகள் யாவும் மந்தநிலையில் நடைபெற்று வருகிறது

குழந்தை வைத்திய நிபுணரைத்தவிர ஏனையவைத்தி நிபுணர்களே தமது சொந்த இடங்களுக்குச் சென்று திரும்பாதவர்களாகும்.

இவர்கள் நடத்தி வந்த வைத்திய பரிசோதனைகளை சாதாரணவைத்திய அதிகாரிகளே தற்போது நடத்தி வருகின்றனர். (க)

## அகதிகளுக்கு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு நச்கிரன் சனசமூகநிலையம், கிராம அபிவிருத்திச்சங்கம், குச்சம் வைரவர் ஆலய பரிபாலனசபை ஆகியன ஒன்றிணைந்து, அண்மையில் நடைபெற்ற கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட அகதிகளின் புனர்வாழ்வுக்கென நிதியினைச் சேகரித்து, அந்நிதியினை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளனர். (க)

## கிராமங்களுக்கு உதவிகள்

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த தேவன்பிட்டி, எள்ளுப்பிட்டி, மருதமடு ஆகிய கிராமங்கள் உலக தரிசன இயக்கத்தின் நிதி உதவியைப் பெறவுள்ளன.

கால்நடைவளர்ப்பு, கோழி வளர்ப்பு, உபஉணவு உற்பத்தியில் ஈடுபடும்பொருட்டே நிதிஉதவி வழங்கப்படவுள்ளது.

மன்னர் மாவட்டத்தில் 11 கிராமங்கள் ஏற்கனவே உலக தரிசன இயக்கத்தின் நிதிஉதவியை பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஜீப்பினுல் மோதுண்டவர் உயிர்தப்பினர்

(மட்டுவில்)

ஜீப்வண்டியில் மோதுண்ட இளைஞர் மயிரிழையில் உயிர் தப்பினர். அவரை சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலிருந்து அவசர சிகிச்சைக்காக யாழ்பாணம் ஆஸ்பத்திரிக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

சாவகச்சேரியில் சைக்கிள் ஒன்றில் சென்றுகொண்டிருந்த சிங்கராஜா என்ற இளைஞரே விபத்துக்குள்ளானவராவர்.

இந்த இளைஞர் இப்பொழுது ஆபத்தான கட்டத்தைக தாண்டிவிட்டதாகத் தெரிகிறது. (அ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## யாழ்ப்பாண மாநகரசபை எரு ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபைக் குரிய முற்றவெளி மீன் சந்தைக்குப் பின்புறத்தேயுள்ள மிருகக் கொல்கள வளவிலுள்ள மாட்டு எரு 19-10-83 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு அவ்விடத்திலேயே வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

அங்குள்ள எருமுழுவதையும் வாங்க விரும்புவோர் அதனைப் பார்வையிட்டு மேற்குறித்த ஏல விற்பனையின் போது சமுகமளித்து கேள்விகளைக் கேட்கலாம். ஆகக்கூடுதலான கேள்விக்காரர் கேட்ட தொகை முழுவதையும் உடனடியாக மாநகரசபைக் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெறல் வேண்டும். விற்பனை முடிந்து நான்கு தினங்களுக்குள் எருவை அப்புறப்படுத்தல் வேண்டும். ஏனைய விபரங்களை இக்காரியாலயத்தில் அலுவலகநேரத்தில் நேரடியாக வந்துபெற்றுக் கொள்ளலாம்.

சீ.வீ.கே. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ் மாநகரசபை.

சுகாதாரப்பகுதி,
மாநகரசபை
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29-9-83

9081

# இந்தியாவிலிருந்து சிங்கள மாணவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்

## இலங்கைப் பல்கலைக்கழகங்களில் படிப்பைத் தொடர விரும்புகின்றனர்!

(கொழும்பு

இந்தியப் பல்கலைக் சழகங்களில் கல்வி பயின்றுவந்த சிங்கள மாணவர்கள் பலர் பலவந்தமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்களின் பலர் இந்தியப் பல்கலைக் கழகங்களில் தமது சொந்த பணச் செலவில் கல்விபயின்றவர்களென்றும் சிலர் புலமைப் பரிசில்கள் பெற்று கல்விபயின்று கொண்டிருந்தவர்களென்றும் தெரிவிக்கப்பட்டன.

இலங்கையில் அண்மையில் நிகழ்ந்த இனக்கலவரங்களின் எதிரொலியாகவே சிங்கள மாணவர்கள் இவ்வாறு இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்களது வெளியேற்றத்துக்கு தென் இந்தியாவில் இலங்கை அரசுக்கெதிரான சக்திகளே காரணமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் கல்விபயின்ற சிங்கள மாணவர்களில் பலருக்கு உடற்காயங்களும் விளைவிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து அவர்கள் கல்வி பயின்ற கல்வி நிலையங்களில் அவர்களுக்கெதிராக கொந்தளிப்பு நிலைதோன்றி அவர்களை இந்தியாவில் இருந்தும் வெளியேற்றுமளவிற்கு நிலைமை மாறியுள்ளது.

இந்தியாவில் இருந்து வெளியேறும் சிங்கள மாணவர்களின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை அங்குள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் கவனித்து வருகின்றது,

ஏற்கனவே இந்தியாவிலிருந்தும் வெளியேற்றப்பட்ட சிங்கள மாணவர்கள் தமது கல்வியை இலங்கையில் தொடர இலங்கைப் பல்கலைக் கழகங்களிம் அனுமதி பெற்றுத் தரும்படி இலங்கை உயர் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளனர். அத்துடன் தாம் இந்தியாவுக்குத் திரும்பிப் போக கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதென்றும் அவர்கள் தெரிவித்தனர். (கி)

## இப்படியும் நடக்கிறது

எரியுண்ட இல்லங்களைத் திருத்தச்சென்றவர்கள்-மிச்சம் சொச்சங்களை மீட்கச் சென்றவர்கள் துரத்தப்படுகின்றனர்.

குடியிருக்கலாம் என்று மீண்டவர்கள் பயமுறுத்தப்படுகின்றனர்.

இத்தனைக்குமிடையே; அந்தக் காணிகள், இல்லங்களை மீண்டும் அவர்களுக்கு வழங்கக்கூடாது என்று பகிரங்க சுவரொட்டிகளும்; ''அவர்கள் திரும்பவும் வருகின்றார்கள்'' என்ற அங்கலாய்ப்புகளும் வேறு!

எல்லாமே நடக்கிறது தலைநகரில்!

— ஊடுருவி

# ''எதிர்பாராத விதமாகவே துப்பாக்கி வெடித்தது!''

## நடிகர் ஜெமினி தகவல்

சென்னை, அக். 3

நடிகர் திரு. ஜெமினி கணேசன் தற்கொலை முயற்சிக்காக தம்மைத்தாம் சுடவில்லையென்றும், எதிர்பாராத விதமாக தமது கைத்துப்பாக்கி வெடித்ததாலேயே தாம் காயமுற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு. ஜெமினி கணேசன் தற்போது குட்டுக்காயத்துக்காக சென்னை மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரிடம் சென்னை பொலிஸ் துணைக் கமிஷனர் வாய்முறைப்பாடுகளை பதிந்து கொண்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவரின் குடும்பத்தவரே அவர் தற்கொலை செய்வதற்காகவே தம்மை சுட்டுக் கொண்டார் என்று பொலிசாருக்குத் தெரிவித்தனர். ஆனல் திரு. ஜெமினி கணேசனின் வாக்குமூலம் அவரது குடும்பத்தவருடையதிலிருந்தும் பெரிதும் வேறுபடுகிறது.

தமது கைத்துப்பாக்கியை தாம் சம்பவத்தினம் சுத்தம் செய்து கொண்டிருந்ததாகவும், அப்போது எதிர்பாராத விதமாக அத்துப்பாக்கி வெடித்ததென்றும் அதனாலேயே தாம்காயமுற்றதாகவும் அவர் குறிப்பிட்டார். கி)

# ''தமிழர் சமுதாயக் குறைபாடுகள்: காந்திவழியில் நீக்குவோம்''

(சாவகச்சேரி)

தமிழ் சமுதாயத்தின் மத்தியில் நிலவுகின்ற சகலவிதமான குறைபாடுகளையும் நாம் மகாத்மாகாந்தி புகட்டிய அறவழி மூலம் நீக்கி, புதிய சமுதாயம் அமைக்கும் பாரிய பணிக்கு உதவிக் கரங்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் உண்மை, அன்பு, சத்தியம், நேர்மை என்பனவற்றினைத் தமது ஆயுதங்களாக பயன்படுத்தி, தமது அன்ருட பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டும்''

இவ்வாறு தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவர் திரு. கு. நேசையா கைதடி அகதிகள் முகாமில் தந்தை செல்வா அறங்காவல் குழுவினராலும், அறவழிப் போராட்டக்குழுவினராலும் இணைந்து நாத்தப்பட்ட மகாத்மாகாந்தியின் 114-வது ஜயந்தி தின நினைவுப் பிரார்த்தனை - கருத்தரங்கிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில்:

தமிழ் மக்கள்தம் மத்தியிலே நிலவுகின்ற பிரச்னைகளை உண்மை வழி நின்று பெரிதுபடுத்தாது தீர்த்துக் கொள்ள முயல்வதுடன் ஆடம்பர வாழ்க்கை முறையை இனியும் பின்பற்ருது காந்தீய வழியான எளிய வாழ்க்கை முறையைப் பின்பற்றக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ருர்.

யாழ். அரசாங்கஅதிபர் திரு தேவநேசன் நேசையாவினல் ஆரம்பித்துவைக்கப்பட்ட இக் கருத்தரங்கில் கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் அகதிகள் பலரும் பங்குகொண்டிருந்தனர்.

மேலும் இந்நிகழ்ச்சிகளின் போது தலவாக்கொல்லை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. வி. எஸ். செல்வரத்தினம், நுவரெலியா தமிழ் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். கனகமூர்த்தி திரு. நாக. பத்மநாதன் அறவழிப் போராட்டக்குழுவைச் சேர்ந்த திரு. வீ. ஜி. தங்கவேலு ஆகியோர் உரையாற்றினர். திரு. சி. க. மயில்வாகனம் நன்றிதெரிவித்துப் பேசினர். (அ)

# பண்ணைபாதுகாவலரின் சடலம்தகனம்

(வவனியா)

வவனியா எம். பி. திரு தா. சிவசிதம்பரத்தின் மடுக்குளம் பண்ணையில் பொறுப்பாகவிருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி மரணமான நடராசாவின் சடலம், நேற்றுமுன்தினம் மாலை தகனம் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

நடராசா என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் நவரத்தினத்தின் சடலம் அவரது மனைவியிடமோ அல்லது உறவினர்களிடமோ ஒப்படைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்யட்டது.

## யாழ். ப.நோ.கூ.ச.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் கைச்சாத்திட்டுக்கொண்டது.

இவ்வருடம் மேமாதம் 2ம் திகதி செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி ஜூன் முதலாம் திகதி முதல் கொடுப்பதாக ஏற்றுக்கொண்ட 140 ரூபாய் படிகொடுக்கப்படாததுபற்றிப் பேச்சுவார்த்தை நடந்தது.

இம்மாதம்10ந் திகதிஊழியர்களின் விசேடபடி 140 ரூபாய் வழங்குவதென்ற முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் 10-ம் திகதி வரை தொடர்ந்தும் செப்டம்பர் மாதச் சம்பளம் எடுக்காமல் தொழிற்சங்க நடவடிக்கையை நீடிப்பதென்றும் ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர். இப் பேச்சுவார்த்தையில் கூட்டுறவு உதவி ஆணையாளரும் சமூகமாயிருந்தார். (மா)

## திருமதி ரங்கா...

!ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனுப் மஜீத்கல்குடா வடமுனையில் அத்துமீறிக் குடியேறிய சிங்களக் குடியேற்றம் தொடர்பாக தமது பதவியை ராஜினுமா செம்திருந்ததும் அதனைத் தொடர்ந்து பொத்துவில் தொகுதியின் இரண்டாது ,எம். பி.யான திருமதி ரங்கநாயகி பத்மநாதன் மாவட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டதும் தெரிந்ததே

## யாழ். சிறைச்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

டித்துறை) மல்லாகம் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தாக்கல்.

இராசரட்னம் பாலசிங்கம் அல்லது சின்னவன் (நல்லூர்) யாழ். நீதிமன்றத்தில் ஒரு வழக்கு.

தியாகராசா ஜெயவேல் (ஊறணி வல்வெட்டித்துறை) இவர் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்ததாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது.

மதுரைவீரன்நந்தகுமார் அல்லது குமார் அல்லது சிவராசா ஜெயகுமார் அல்லது நாகரத்தினம்ரவீந்திரன்(மதங்குடரக்குவானை) இவர் யாழ் மாவட்டம் மன்னுர் ஆகிய இடங்களில் துப்பாக்கி முனையில் பல பயங்கரகொள்ளைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர் எனப்பொலிஸ் விசாரணைகளிலிருந்துதெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் தேநீர் இடைவேளையின்போது சகல கைதிகளும் சிறைச்சாலைக்குள் திறந்து விடப்பட்டிருந்தனர் என்றும் மேற்குறிப்பிட்ட ஆறு றிமாண்ட் கைதிகளும் மற்றைய கைதிகளுக்குள் சேர்ந்துகொண்டு சிறைச்சாலை ஆஸ்பத்திரியின் பின்கதவால் சென்று அங்குள்ள கதவு வழியாக ஏறி யாழ். பொலிஸ் அதிபரின் இல்லம பக்கம் புகுந்தார்கள் என்றும், பின்னர் சிறைச்சாலை அகழிச் சுவரில் பதிக்கப்பட்டிருந்த பீங்கன் துண்டுகள் தாக்காதளவுக்கு கிளித்துக்கட்டப்பட்ட துவாய் துண்டுகளை மூடிந்து அதன்வழியாக இறங்கி, இரும்புக்கம்பிக் கொழுக்கி ஒன்றை அகழிச் சுவரில் கொழுவி அதன்மூலம் வடக்குப் பக்க அகழிப்பாதை மூலம் தப்பித்துச் சென்றுவிட்டார்கள் என்று தெரிவிக்கப் படுகிறது.

சிறைச்சாலையிலிருந்து றிமாண்ட் கைதிகள் தப்பிச் சென்றது சம்பந்தமாக யாழ் குற்றத்தடுப்புபிரிவு பொலிசாரும், சிறைச்சாலை அதிபர் திரு. எஸ்: சத்தியமூர்த்தியும் விசாரணைசெய்துவருகின்றனர். சிறைச்சாலைப் பாதுகாப்பு ஊழியர்கள் எவரும் இதுவிடயத்தில் சம்பந்தப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

# மரண அறிவித்தல்

## தையல்நாயகி அம்மாள் கனகராஜா

வல்வெட்டித்துறை தையல்நாயகி அம்மாள் கனகராஜா காலமானுர். இவர் ஓய்வுபெற்ற கணக்காளர் செல்லத்துரை கனகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தபால் தந்தி பிரதம அத்தியட்சகர் வேலுப்பிள்ளையின் புதல்வியும், ஞானபாஸ்கரன்(காலஞ்சென்ற மருத்துவ மாணவன்), கனகமனோகரன் (சட்டத்தரணி), கருணுகரன் (பொறியியலாளர் - கணக்காளர், பாரெய்ன்), பத்மராணி, புஷ்பராணி, பிரபாகரன் (கணித விரிவுரையாளர், அமெரிக்கா), தயாபரன்(கொழும்பு மருத்துவபீடம்-இறுதியாண்டு), றமணகரன் ஆகியோரின் தாயாரும், லங்காநேசன் (வவுனியா அபிவிருத்தித்திட்ட இயக்குநர்), கணேசன் (சட்டத்தரணி, இலங்கை வங்கி), கௌரிபாய் ஆகியோரின் மாமியாரும், திருமதி றேகிணி சோமசுந்தரம், திருமதி மனேன்மணி காத்தாமுத்து, டாக்டர் (திருமதி) ராஜேஸ்வரி பொன்னம்பலம், யோகராணி நடராசா (ஆசிரியை. பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரி), பல் வைத்தியர் சுவர்ணுதேவி சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், ஜயந்தன், விஜயதர்ஷினி, பிரகலாதன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 4-10-83 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வல்வை ஊறணி மயானத்தில் நடைபெறும். 9094

# இந்த ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெறலாம்!

(கொழும்பு)

தோட்டப்பாடசாலையில் சேவை செய்த ஆகிரிய சேவையுடன் அரசாங்கப்பாடசாலைகளில் ஆற்றிய சேவைகளையும் சேர்த்து ஆசிரியர்கள் ஒய்வூதியம்பெற அனுமதியளிக்கப் பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் திரு. க. சிவஞானம் தெரிவித்தார்.

கடந்தமாதம் 27ம் திகதி இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, செயலாளர் திரு. க. சிவஞானம் ஆகியோர் திரு. பிரட்மன்வீரக்கோனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது தோட்டப்பாடசாலைகளில் சேவைசெய்த ஆசிரியர்களின் சேவைக்காலத்தையும் அரசாங்கசேவைக்காலத்துடன் சேர்த்து 45வயதுடையோர் எல்லாமாக 20வருடம் பூர்த்தி செய்திருந்தால், அவர்களையும் ஒய்வூதியம் பெறத்தகுதியுடையவர்களாகக் கணிக்கவேண்டுமெனக்கேட்டிருந்தனர்.

இத்தீர்மானத்தின்படி ஓய்வூதியம்பெற விரும்புபவர்கள் கல்வியமைச்சிற்கு விண்ணப்பித்துவிட்டு, இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் திரு. க. சிவஞானத்திற்கும் அறிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றிஅமைச்சர் தொண்டமானுக்கும், ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும், கல்வியமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவிற்குகும் திரு: பிரட்மன் வீரக்கோன் அறிவித்துள்ளார்.

## துப்பாக்கி...

1ம் பக்கத் தொடர்ச்சி)

பர் வீட்டு வாசலில் நின்றதாகவும் சிறிது நேரத்தில் வான் எடுக்கப்பட்டு மற்ற இருவரும் ஏறிச் சென்று விட்டதாகவும் யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்தவான் நேற்றுக் காலை மானிப்பாய் சோதி வேம்படி என்ற இடத்தில் அநாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு, யாழ். பொலிஸ், நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. வானில் பதிந்திருந்த கையடையாளங்களும் பொலிசாரால் பதிவுசெய்யப்பட்டன.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.